Vol II

T. D. R. C. 1926

R. R. 497/III - 1910

[illegible]

[illegible]

O-,392MAM;5

No7

118197

471

ஸ்ரீ

ஸ்ரீ கிருஷ்ண சகாயம்.

REGISTERED 16 AUG 19[illegible] MADRAS

# சித்திரசேனன் சண்டை நாடகம்.

இஃது
திண்டிவனம் தாலூகா தென் ஆலப்பாக்கம்
கிராமத்திலிருக்கும்
பண்டகுலம், ஆதி-ராமசாமி ரெட்டியார் குமாரர்
ம-ா-ா-ஸ்ரீ,
ஆதிமுத்து ரெட்டியார்
அவர்களால்,
எட்டுப்பிரதியைக்கொண்டு எழுதப்பட்டு

தக்கோலம்,
இராமசாமிநாயுடு அண்டு சன்ஸ்
அவர்களது,
ஸ்ரீ லட்சுமிநாராயண விலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1910

ரிஜிஸ்டர் காபிரைட்

இதன் விலை] [அணா-4.

நெ. 18 தொட்டிக்கலே குமரப்பமுதலி தெரு.

N09
894.8112
1726

ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

# சித்திரசேனன் சண்டை

## நாடகம்.

இஃது,

திண்டிவனம் தாலூகா தென் ஆலப்பாக்கம் கிராமத்திலிருக்கும்

பண்டகுலம். ஆதிராமசாமி ரெட்டியார் குமாரர்

ம-ள-ள-ஸ்ரீ,

ஆதிமுத்து ரெட்டியாரவர்களால்

ஏட்டுப்பிரதியைக்கொண்டு

எழுதப்பட்டு

தக்கோலம்

இராமசாமி நாயுடு

அண்ட் சன்ஸ் அவர்களாற்றமது,

சென்னை-குளை,

ஸ்ரீ லட்சுமி நாராயண விலாசம் பிரஸிற்

பதிப்பிக்கப்பட்டது.

1909.

ரிஜிஸ்டர் காபிரைட்.

## ரிஜிஸ்டர்ட் காபிரைட்

## அறிவிப்பு.

இதனால் சகலமான கன தனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் இந்த சித்திரசேனன் சண்டை நாடகத்தை எம்மால் சகல சுதந்திரமும் பெற்றுக்கொள்ளப்பட்டு 1867 - வருஷத்திய 25-வது ஆக்டின் 9-வது செக்ஷன்படி (ரிஜிஸ்டர் காபிரைட்) செய்யப்பட்டிருக்கிறபடியால் எம்முடைய உத்திரவின்றி இந்நூலை எவர்களும் அச்சிடக்கூடாது.

இப்படிக்கு,

**த. இராமசாமிநாயுடு அன்ட் சன்ஸ்.**

3

ஸ்ரீ
ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

REGISTERED
16 AUG 1910
MADRAS.



# சித்திரசேனன் சண்டை நாடகம்.

### விருத்தம்.

சீர்வளரும்சோலைநகர் வடபாரிலமர்ந்த இருக்காழிசெல்வன்
பேர்வளரும்மயிலப்பூதலமுந்தழைத்தோங்க இ... மைபுன்னோன்
கார்வளருமுகத்தோன் இக்கதைக்குகனாய் இருந்தயெழுத்தாணிகொண்டு
ஏர்வளருமக்கலையோ னொருவாகனமேறி வருகின்றாரே.



### கணநாதர்வருகிற தரு.

கணநாதரிதோவந்தார் சபைமுன்பாக
கணநாதரிதோவந்தார்

கணநாதரிதோவந்தார் கௌரிபாலனும்
குணமான இக்கதையை கூறவேபிறந்தனை.

தந்திமுகந்துலங்க — தொந்திவயர்குலுங்க
திந்தோம் திந்தோமென்று — சிந்தை கடனஞ்செய்து-கண

காவிச்சதங்கைஇரு — தோளிலாரங்கள்பூண்டு
மார்பில்முப்புரிநூலும் — வச்சிரபதக்கமின்ன-கண

ஆறுவாகனமேறி — ஐவர்கதைக்குமுன்னே
வேகத்துடனே வந்தார் — விமலனார்பெற்ற சுதன்-கண

## பாண்டவர்கள் சபைக்குவருகிற விருத்தம்.

சந்திரகுலம்விளங்க தாரணிதழைத்தோங்க
ஆச்சிரமம்வனத்திலுள்ள அருந்தவர்முனிவர்வாழ்த்த
மந்திரவேதகோஷ்டம் மறையவர்ஆசிகூற
சுந்திரபாண்டவர்களும் ஆரோபதைவருகின்றனர்.



## பாண்டவர்கள் சபைக்குவருகிற தரு.

தருமபூபதியும்வந்தார் — கொலுவதாக
தருமபூபதியும்வந்தார்

தருமபூபதியும்வந்தார் — தவமியர்கருகாக
தம்பிமார்கள்கைகூப்பி — தாளிணைபணிந்திட-கரு

சற்குணசிற்குண நற்குணராகிய
தாரணியிலெவர்கரு மனமதுமகிழவே. (தரும)

அந்தணர்முனிவர்கள் — ஆசிகள்கூற
அரிகரிநாரணனென்றவர் — மனமுருகிட-கரு



டுங்கர துந்துபி திந்திமிதிமியென
சந்திரவம்மிசம் தரணியிலோங்க (தரும)

தாடாண்மைவேந்தர்கள் — சரணம்புரிந்திட-கருள்

சர்ப்பனை அர்ப்பர்கள் கர்ப்பனைநிசமென
சங்கரன்செயலால் இங்கிதவளஞ்செலும். (தரும)

துஷ்டர்செய்தீவினை — சர்ச்சனர்க்குண்மைபோல
தொல்வினையகற்றியே — நல்வினை கை பற்றியே-கருள்

சுத்தன்விகரண கர்த்தனும்-இவனென
தாபதிமதிபதி அதிபதி-இவரென (தரும)



## தவமியர்க்கு பாண்டவர் சொல் விருத்தம்.

வேதவேதியரேயெங்கள் விமலனுக்கொப்பாகின்ற
நாதனேபோற்றிஇவ்விய நற்பதமுடையமெய்யா
நீதனேநிமலாநந்தன் நின்மலர்த்தாளிணைக்கு
சாதனையடிமைநாங்கள் தவமியரேசரணமையா.

### தவமியர்சொல் விருத்தம்.

பாண்டுதன்புதல்வாயிந்த பாலர்கள்அனைவர்வாழி
வேண்டியசுபங்கள்பெற்று வேதமுள்ளளவும்வாழி
ஆண்டவனருளும்பெற்று ஆழியுள்ளளவும்வாழி
நீண்டதோர்குழலாள்மாது நித்தமும்வாழிதானே.

### பொது வசனம்.

இந்தப்பிரகாரம் தவமியரிடத்திலே ஆசீர்வாதம்பெற்று கொலுவிற்றிருக்கும்போது அஸ்தினாபுரத்திலிருந்து காந்தர்ப்பவனத்திலிருக்கும் பாண்டவர்களைக் காணத்தக்கதாக வேதியராகிய பிராமணன் வருகிறவிதங்காண்க,



# வேதியர்வருகிற தரு.

வேதியர்வந்தனரே பாண்டவர்பக்கல்
வேதியர்வந்தனரே.

ஆதிவேதமுதல்
நாதனையனுதினம்
நீதிகளைப்பயின்று
மன்னன்நதித்திடும் - வே

காவிவேஷ்டியுடுத்து
மேவும்சிரசணிந்து
சுவர்ணபீதாம்பரம்
விசையுடனேநடந்து - வே

சதிசெய்துதுரியோதிரன்
அதிசெயபாண்டவர்
மதியைப்பிகலெவழ்ந்து
அம்பிகைகாணவே - வே

மார்பில்முப்புரிநூலும்
ஆரமேகம்பூண்டு
வச்சிரபதக்கமின்ன
அழகுடன்துருசாக - வே

தர்மர் விருத்தம்.

அந்தணர்குலத்துதித்த அருமறைவேதியரே
சுந்தரபாதந்தன்னில் தெண்டம்நான்சரணமையா
வந்தநாள் அஸ்தினபுரத்திலனைவரும்க்ஷேமந்தானோ
தந்தையார் திருதராட்டிரன் தம்பிமார்க்ஷேமந்தானோ.

தர்மர் வசனம்.

ஆகோவாருமையா பிராமணோத்தமா அடியேன் தங்களிலே வரும் தங்களுடைய பாதாரவிந்த கமலங்களுக்கு சாஷ்டாங்க தெண்டம்தெண்டமையா சுவாமி நாங்கள் இவ்விடம் வந்ததான்முதல்கொண்டு எங்கள்பெரியதகப்பனார் எங்கள் தம்பிமார் துரியோதனாதியரும் பெண்டுபிள்ளைகளெல்லாரும் க்ஷேமந்தானோ சொல்லுமையா சுவாமி.



வேதியர் வசனம்.

ஆகோ கேளுமையா பாண்டவர்தலைவனாகிய தர்ம பூபதியே ...ரும் உம்முடைய தம்பிமார்களும்மனைவியும் ஆதியுள்ளளவும்வாழி மகா கர்மியாகிய உனதுபெரிய பிதாவும் வஞ்சனைகுடியேன்வந்திருக்கும் தம்பிமார் துரியோதனாதியரும் க்ஷேமமாகதானிருக்கிறார்களப்பா மகாராஜனே.

தர்மர் விருத்தம்.

ஐயரேவேதமோதும் அந்தணாளர்கள்முன்பு
செய்தவப்பயனோயிந்த தீவினையனுபவிக்க
வையுரோமனதுநொந்து வலியுறும்பாவந்தானோ
மெய்மையாயுரைசெய்யவேண்டும் வித்தகவேதியரே.

தர்மர்வசனம்.

ஆகோவாருமையா பிராமணோத்தமா நாங்கள் முன்புசெய்த தீவினையோ இப்படி அனுபவிக்கிறது சொல்லுமையா சுவாமி.

வேதியர் விருத்தம்.

அத்தனர்செயலோமுன்பு ஆமிந்த இது தாழ்வுதானோ
குற்றமொன்றில்லாநீங்கள் குறையொன்றுமெண்ணாதீர்கள்
மெத்தவும்நல்லோருக்கு வினைதியர்செய்தாலுந்தான்
சுற்றமும்பலிக்காதாலும் நலம்பெறவாழ்குவீரே.

வேதியர் வசனம்.

ஆகோ கேளுங்கள் பாண்டவர்களே சிவன்செயலல்லாது ஒன்றும் நடக்கமாட்டாது ஆகிலும் இதுதாழ்வென்று நினைக்கவேண்டாம் துர்ச்சனர் செய்கிற தீங்கு சர்ச்சனர்க்கு பாங்காகும் அதுபோலே உங்களுக்கு ஒருக்காலும் தாழ்வுவரமாட்டாது இந்த பூலோகமெல்லாம் ஏகச்சக்கிரேஸ்பராக நீங்களே ஆளப்போகிறீர்களப்பா நானே அஸ்த்தினபுரிக்கு போய்வருகிறேன் பாண்டவர்களே.

பாண்டவர் வசனம்.

ஆனால் போய் வாருமய்யா பிராமணோத்தமா.

பொது வசனம்.

இந்தப்பிரகாரம் பிராமணன்விடை பெற்றுக்கொண்டு அஸ்த்தினபுரிக்கு வருகிற தருணத்தில் அஸ்த்தினபுரிபட்டணத்துக்கு பெரிய அரசனாகிய திருதராட்டிரன் மந்திரிப்பிரதானிகளுடன் தன் அரண்மனையில் கொலுவுக்கு வருகிறவிதங்காண்க.

## திருதராஷ்டிதன் கொலுவு.



### திருதருஷ்டிதன் விருத்தம்.

அஸ்திநபுரிக்கு அதிபதியான அரசனும்திருதருட்டிடியனும்
சத்தியந்தவறு தறுவனைவிடாத தளபதிவிதுரன்கூட
சுத்தமங்கையர்கள் சோபனம்பாட
சூரர்கை கட்டியேநிற்க
மத்தளதாளமும் முரசமேயிரப்ப
மன்னனுங்கொலுவதாய் வாருன்
இப்படிக்கொத்த சம்பிரமத்துடனே
திருதருட்டியன் கொலுவில்வந்தார்.



## திருதராட்டிதன் வருகிற தரு.

ராஜாதிராஜன் மகாராசன் திருதராட்டிதன்
ராஜன்கொலுவ தாகினன்

தேசமன்னர் வாசமுட்டனேவந்து
தன் டனிட்டிரஞ்சியே தொழுதுகைகட்டியே (ராசா)

மத்தளதாளமும் மல்லரிபூரியும்
அதிரவேமாதர்கள் யெதிரினில்நாட்டியமாட (ராசா)

சதுரங்கசேனையும் தளகர்த்தன இபதி
சபையில்தானும் தனஞ்செயனுங்கூட (ராசா)

வீராதிவீரர்கள் விருதுகட்டியங்கூற
விண்ணுலகிந்திரன் வீற்றிருப்பதுபோலே (ராசா)

பொது வசனம்.

…டியாக திருதராட்டிதமகாராஜன் கொலுவீற்றிருக்கிற அஸ்திநபுரியிலிருந்து பாண்டவர்களிடத்துக்குப்போயிரு…மணன் திருதராட்டிதனிடத்துக்கு வருகிற விதங்காண்க.

விருத்தம்.

வனத்தைவிட்டகன்றுவேத மறையவர்கரம்நோக்கி
தனத்தினில்மிகுந்தமன்னன் தருபதிதிருதராட்டிதன்
மனத்களத்தன்னிற்சென்று மன்னவன் தன்னைக்கண்டான்
பனைத்ததோள்வீரதெண்டம் பண்ணினான்கண்ணில்லானே.

வசனம்.

இந்தப்பிரகாரம் பிராமணன் பாண்டவாளிடத்தில் விடைபெற்றுக்கொண்டு வனத்தைக்கடந்து அஸ்திநபுரியில் திருதராட்டிதன் கொலுவீற்றிருக்கிறபோது பிராமணன் வர தண்டம் சமர்ப்பித்தான்.

பிராமணன்சொல் வசனம்.

மகாராஜனாய் தீர்க்காயுசுபெற்று இருப்பாய் ராஜனே.

திருதராட்டிதன் வசனம்.

சுவாமிகள் இவ்விடத்திற்கு வந்த காரியம் சொல்லவேணுமையா சுவாமி.

பிராமணன்-விருத்தம்.

குருகுலத்தரசேறிந்த குவலயமன்னனேயும்
பெருமையும் அரசும்செல்வம் பெற்றகாலாவதென்ன
அருமையுன் தம்பிமைந்தர் அருங்கானில்படுந்துன்பந்தான்
தர்மதேவதைப்பொருள் சமஸ்தானம்தாழ்வுண்டாமே

வசனம்.

கேளும் திருதராட்டித மகாராஜனே நீரே பெருமையும் செல்வமும் அரசும்பெற்றதினலாவதென்ன உனது தம்பி பிள்ளைகள் கானகத்தில் வெய்யலில் பனிகாற்றில் சிரமைப்படுந் துன்பம் தருமதேவதை கொஞ்சமேனும் பொருள் கொள்ளவில்லையாகையால் உனது சமஸ்தானம் தாழ்வுண்டாகும் ஆனல் நான் போய் வருகிறேன் மகாராஜனே.

திருதராட்டிதன்-விருத்தம்.

மந்திரிவிதுராகேளும் வனஞ்சென்றபாண்டுபுத்திரர்
அந்தமாநகரந்தன்னில் அருசுவையோடுண்டார்
பந்தமாமலர்கள் பஞ்சமெத்தையில்துயின்றமன்னர்
கந்தமூலங்கள்இன்று கற்பாரைபடுக்கையாச்சே

வசனம்.

வாரும்பா எனது மந்திரியாகிய தம்பி, வனத்துக்குப்போன பாண்டவர் இவ்விடத்தில் அருசுவைபதார்த்தங்களுடன் அன்னம்உண்டிருந்து பஞ்சணைமெத்தையின்மீது மலர்பரப்பி சயனித்து நித்திரைசெய்தவர்கள் வனத்தில் கந்தமூலங்கள் புசித்து கற்பாரையின்மேல் படுக்கலாச்சுதே என் சொல்தவராத பிள்ளைகளுக்கு இப்படிநேர்ந்தது ஆகிலும் இதைவிட வொன்றும் வேறேவரப்போகின்றதா மந்திரி.

திரிதராட்டிதன் சொல் தரு.

நான் என்னசொல்குவேன் நாதர் சொன்னசேதி
நவிலுவேன்தம்பி நீ கேள் விதுரனே
கானகந்தன்னிற்சென்ற பாண்டவர்க்கு
வேதமந்திரம்கற்பித்தார் வியாசருமே
அற்புதமாய் பாரதமுடிக்க
பார்த்தன்பரமனால் வரம்பெற்றான்
பலமானகாலகேயரை பணிந்துகொல்வதைசெய்தான்
விரைவாம்அன்றாமனை விரும்பியநேகரை
அதற்குசெய்து வீரபமுடிக்கப்பெற்றா



விண்ணுலகமேசென்று மன்னன்குபேரனிட
மனதன்பு மிகவுண்டு
மந்தாரமலர்கொண்டு வந்தாரென்றவர்சொல்ல
இரவும்பகலுமல்லோ இரக்கஉறக்கமில்லே
என்னைநான்செய்குவேன் என்வயிறெரியுதே
கண்ணழகமட்டியா கருத்தில்லாநாற்றுவர்மேல
கானகபாண்டவரை கணையேவிகொல்வாரோ
தம்பிஇதுவென்ன சதிமோசமாகுமோ
தாரமக்களுக்கு தாழ்வுண்டாமோசொல்வாய்

விதுரன் விருத்தம்.

சந்தேகங்கொண்டவுந்தன் மனதைப்போல
சமர்புரிவார்மக்களுந்தன் புத்திகேளார்
வந்தாலும்தெரியாது வகைமோசங்கொள்வார்
வனம்சென்றபாண்டவர்கள் வசனம்பொய்யோ
அண்டவொண்ணு அக்கினியைமூட்டி
அரிவிக்கவென்றால் யாவரால்முடியுமோதான்
மூடருந்தன்மக்கள் நூற்றுவரும்நாளை
முனைவீரர் ரணக்களத்தில் முடிகுவாரே.

வசனம்.

கேளும் அண்ணுவே உமக்கு சந்தேகம் சேரிட்டிருப்பது போலவே, உமது புத்திரர், பெரியவாள் சொற்புத்தியைக்கேளார், அல்லது தனக்கு நேரிடும் துன்பமும்தெரியாது மமதைகுடிகொண்டவர்கள் பாண்டவர்கள் வாக்கு பழுதுபோமோ அக்கினிமூட்டுகிறது பெரிதல்ல அதைஅவிக்கவேணுமானல்பிரயாசம் அதுபோலே நாளை ரணக்களத்தில் பாண்டவர்களால் உனது பிள்ளைகள் நூறுபேருமடிந்துபோகிறது நிட்சயந்தான் அண்ணுவே.

பொது விருத்தம்.

இப்படிதம்பிசொல்ல கண்ணிலாதான்
இடிவிழுந்தமரம்போலே மண்மேல்சாய்ந்து
சிந்தைநொந்துமனமுருகி அலறிகூவி
தீக்கொழுந்தமாளிகைபோல் வெக்கிவெக்கி
விந்தையென்றுபலர்சொல்ல புலம்பலுற்றான்
விரகுடனேகாவலர்கள் மகன்பால்சென்று
தந்தைபாழம்சேதிசொல்ல துரியன்காளை
சகுனிதுர்ச்சாதனன் கொலுவாகவருகின்றாரே.

வசனம்.

இந்தப்பிரகாரம் விதுரராஜன்சொல்ல திருதராட்டிரன்கேட்டு மூர்ச்சையாகி பூமியில்விழுந்து புரண்டு ஊளமிட்டழும்போதுகாவலர்கள்கூடி துரியோதிரனுக்குச்சொல்ல அப்போது தகப்பனுக்கு தெளிவுசொல்வதற்காக தன்னுடைய மந்திரிப்பிரதானிகளும்சகுனி கர்னன் புடைசூழ்ந்தக்கதாக கொலுவாகவருகிற விதங்காண்க.

துரியோதிரன் விருத்தம்.

தாணியீரேழுமெச்சு சந்திரகுலம்விளங்க
திரம்பெருகும்திருதராட்டிரன் செல்வனும்துரியன்றானும்
சிறந்தனில்மகுடமின்ன நாகசீர்பெருங்கொடியுமாட
வறமிகுசபையோர்சூழ மகாசபைகொலுவாகினார்.

## துரியோதிரன் தரு.

திங்கள்குலத்துங்கனை — துரியோதனமகாராஜன்
மங்களசோபனம்பாடவே — துரியோதனன்
மன்னவனார் கொலுவாகினார்
அஸ்தினபுரிக்கதிபன் — அரவக்கொடியசைய
ரத்தினமுடிதுலங்கவே — துரியோதனன்
வெற்றியாகவந்து மேவினான்
ஆனைபரிசேனைகளும் — அதிரதர்களுறுவரும்
மான்விழிதேவிமார்சூழவே — துரியோதனன்
வாசமுடன்கொலுவாகினார்.

துரியோதிரன் விருத்தம்.

அரவக்கொடியோ னெழுந்திருந்து
அம்மான்கர்னன் தம்பியரும்
மருவத தந்தைமார்
மார்பணைந்து மதியெனக்கலக்க
மயக்கமென்னவரும் பொருளதோர்
பாண்டவர்கள் வலுவேதவர்நமக்கிடோ
தெரியாதாதந்தை இன்னமுங்கேள்
சிங்கம்யானைக் கஞ்சாதே.

வசனம்.

இந்தப்பிரகாரம் கொலுவீற்றிருந்த துரியோதனமகாராஜனும் மாமனாகிய சகுனி கர்னன் துணைவராகிய தம்பிமாரும் சூழ்ந்துவர



யெழுந்து தகப்பனிடத்துக்குவந்து மார்போடே தழுவிக்கொண்டு இப்படிக்கொத்த அவ்வைதிரியங்கொண்டு மனந்தடுமாறி மயக்கங்கொள்வதென்ன எங்கள் வலுவுக்கு அந்தபஞ்சையாகிய பாண்டவர்களோடோ அநேகம் ஆனைகூட்டங்களுக்கு ஒருசிங்கமானது அஞ்சிப்படுகிறதுண்டோ யென்தந்தையே.



## துரியோதிரன் சொல் தரு.

சந்தேகமாகதயங்கவேண்டாமையா யென்தந்தையே
இதைசரியென்றுயென்வார்த்தை
நிசமாகதேருவீர் — என்தந்தையே
கானகத்தில் கந்தமூலம் — பொசித்தவர்தந்தையே
கச்சாயமுண்டயெங்கள் — கைக்கிணையாவரோதந்தையே
விமலன்மகனும் — விதுரனுங் கர்ணனும் தந்தையே
வில்லாச்சாரியர் — வீஷ்மருமிருக்கவே தந்தையே
இந்தப்பிறப்பில் — பஞ்சயேழைகள்
கெலிப்பரோ — தந்தையே
ஏழுபிறப்பிலும்யெங்களைவெல்வாரோ — தந்தையே
விர்தையீதென்னவிசாரமடைகுறீர் — தந்தையே
வில்லாண்மைவீறமும்மேன்மையும்பொய்யாமோ — தந்தையே

குறையேதுனக்கென்னகுறைந்தையரிருக்கவே — தந்தையே
குன்றுதலையானகுற்றங்களென்றதே — தந்தையே

துரியோதனன் விருத்தம்.

புத்திரர்வலுமையென்ன பேதைதந்தையரேகேளீர்
அத்தனார்செயலினாலே அமிர்தசஞ்சீவியையுண்டேன்
சத்துருமேலிப்பிறப்பில் சரிமுப்பழுதாகாது
வெற்றியேசொல்லதந்தை பொய்யெல்லாம்புரிகின்றனே

வசனம்.

உமது புத்திரனாகிய எனதுவல்லமையை அறியாததந்தையேகேளும் /யாதொருசஞ்சீவிமந்திரம் சித்திபெற்றிருக்கிறேன் அதனாலே தெண்டாயுதமெடுத்து சத்துருக்கள்பேரில்யெதிர்த்துபோர் செய்தால்மலைப்பிணம்செய்வேனேயல்லாமல் விடுகிறதில்லை ஆகையால்நீர்வன் மனந்தேறுமலிருக்கின்றீரென்று சொன்னமாத்திரத்திலேதிருதராட்டிதனும்மனக்கிலேசம்நீங்கிதைரியங்கொண்டுதிரேகம் பூரித்து தன்குமாரனாகிய துரியோதனனுக்கு வாழ்த்தி விடைகொடுத்தானென்பது.

பொது விருத்தம்

இந்தப்படிதந்தையினால்விடைபெற்றுயெழுந்து
கர்ணன்அம்மானைக் கூட்டிக்கொண்டு
கந்தமலர்ச்சோலையிலிறங்கும்காலை
கட்டழகன்வில்விஜய னிவாதகவசனை
சிந்தைவதைசெய்து ஜெயம்பெற்று
தந்தையென்னிடதாள் வணங்கிதமையன்பக்கல்
பந்தமுடநேகவென்று விடைகொடுத்தான்
பார்த்திபன்தேரேறி வருகின்றாரே.

அர்ச்சுனன்விருத்தம்

சிந்தைதங்கிருந்தாரந்த வில்விஜயன்செய்கை
தந்தைதாள்தன்னில்வீழ்ந்து தமையனைசேரவென்று
முந்திமாதலியைநோக்கி முனைகொள்தேர்நடத்துகின்றான்
சுந்திரவிஜயன்தானும் தேரேறிவருகின்றானே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக தகப்பனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு கர்ணன்சகுனிஅம்மானைக்கூட்டிக்கொண்டு திருபூங்காவனச்சோலை



யிலிருந்து ஆலோசனைசெய்துகொண்டு இருக்கிறதருணத்தில்இப்பால் அர்ச்சுனன் தேவலோகம்போய் தேவேந்திரன் சொன்னப் பிரகாரம் நிவாதகவசகாலகேயரை சம்மாரம்செய்துசெயம்பெற்று தகப்பனாகிய தேவேந்திரனிடத்தில்விடைபெற்று காந்தருவவனத்திலிருக்கும் தமையனாகிய தர்மராசனிடத்துக்கு அர்ச்சுனன் தேரேறி கொண்டுவருகின்றான்



## அர்ச்சுனன் தரு.

| | |
|---|---|
| மாதலியும்தேர்நடத்த | வாக்குள்ளதனைதுசெயனும் |
| காதலுடன்தர்மர்பக்கல் | கடுகியேவாறான் |
| நாதகீத வேதம்பாட | நங்கையர்கவரிவீச |
| ஆதிநாரணன்மைத்துனனான | அர்ச்சுனன்வாறான் |
| சித்திரவிசித்திரமான | தேவரின்மவுலிசூட்டி |
| மச்சவண்ணன்மைத்துனனான | பார்த்திபன்வாறான் |
| தந்தைஇந்திரன் | பொற்கின்னத்தில் |
| தாஇந்திராணி | யமுர்தமூட்ட |
| விந்தையுடன் | உண்டமைந்தன் |
| விசையன் | வாறான் |

விஜயன் கவி.

தந்தைக்குநிகரும்பெற்றதமையன்மார் பொற்பாதத்தில்
சிந்தையுமகிழ்ந்து உந்தன்சென்னியால்பணிந்தேனன்று

தர்மர் கவி.

பந்தமா இந்தபாருலகளவும் வாழி
விந்தையாயுனதுவில்லும் வீறமும்வாழிதானே

தர்மர் வசனம்.

கேளுமப்பா அர்ச்சுனா இந்தபூமியுள்ளநாள்வரைக்கும் உனதுவில்லும் வீறமும் நீயும்வாழி மகாராசனாய் தீர்க்காயுசு பெற்றுஇருப்பாய் யெழுந்திரும் தம்பிஅர்ச்சுனா

விஜயன் தரு.

தந்தைக்குநிகரானஎன் தமையன்மாரே
தங்கள்பாதாரவிந்தங்களுக்கு சரணம்சரணமே அண்ணாவே

தர்மர்-விருத்தம்.

தம்பிமார்இருவருமே போற்ற
தனஞ்செயன் வாழ்த்துதல்புரிந்து
நம்பியேரோமேசனைப்பணிந்து
நலம்பெரும்ஆசிர்கள்பெற்று
அம்புவிக்கரசு ஐவரும்தேவி அக்கினிகோத்திர
பிராமணரும்செம்மரிகுழும் காந்தர்வங்கடந்து
தௌவுத்தியவனமதில் செறித்தார்

வசனம்.

தம்பிமார்இருவராகிய நகுலசகாதேவனும் தேவியாகிய துரௌபதையும் தனஞ்செயன்பாதத்தில் போற்ற அவர்களுக்கு ஆசிர்வாதம்செய்து மகாதவசிரேஷ்டனாகியரோம மகாரிஷிபாதத்தில்பணிந்து அநேகவரப் பிரசாதமும்ஆசிர்வாதங்களும்பெற்று பாண்டவர்களும் தேவியாகியதுரௌபதையும்தவுமியரும்அக்கினிகோத்திரபிருமணர் பன்னிருயிரவரும் கந்தர்ப்பவனங்கடந்து தௌவுத்தியவனத்தைச் சேர்ந்து பன்னசசாலைதன்றுநேமித்து அதில்கந்தமூலங்களைப்பொசித்து காலங்கழித்து வருகிறநாளில். அஸ்தினாபுரத்தில் கவுரவர் நூற்றுவரும் கர்னன் சகுனி இவர்கள் பூங்காவனச்சோலையிலிருந்து யோசனைசெய்கிறவிதம்.



துரியோதனன் விருத்தம்.

அன்பரேகேளுமெந்தன் ஐவர்மேல்பக்ஷமுள்ள
வம்பனாம்விதுரனந்த வனமதிற்சென்றுவந்து
நெந்புள்ளதந்தையையும் சீர்வரம்பெற்றராந்த
தம்பியுமெண்செய்வேனென்றுதந்தையுமனம்நொந்தாரே.

வசனம்.

அகோகேளுங்களப்பா அன்பர்களே விதுரனெப்போதும் பாண்டவர்கள்பேரில் பக்ஷமுள்ளவன் அவனே பாண்டவரிருக்கும்வனத்திற்குப்போய் அவர்கள்சொல்படித்தை அநேகபலமுள்ளவர்களென்றுசொல்லியிருப்பான் ஆகையினாலேதான் தந்தையும் வருத்தமடைந்தார் ஆகையால்தர்க்கு என்னயோசனை அன்பர்களே யென்று கேட்க கர்னன் சொல்லுகின்றான்.



கர்னன் சொல் தரு.

வெல்லும்யோசனை இதுவே பாண்டவர்களை
கொல்லும்யோசனை இதுவே
நல்லயோகமுள்ள ராசனேயுனக்கிப்போ
தொல்லுலகுள்ளமைத்துனர் தொழுதுமேதிர்க்குமுர்
அரபதிமகிபதி அதிபதிவிதறணை
சூரனே நனை வீரனே கேள் வெல்

மன்னவர் பாண்டவரை வெல்லுவீர்
லக்ஷ்மியும் உன்னிடபயமில்லை
உதையபானுவிதோ உண்மைகள்பஞ்சவர்
ருமினி செத்தவர்
உத்தமசித்திய சத்தியனேகேள் வெல்.

சிறப்புடன்தேவிமார் தேரேறி
நாமெல்லாமறப்புடனவர் வாழும்
வனமது சென்றாலே
நாதுதுரோபதைமனமது உருகியே
மன்னரைவெருப்பான் மடிகுவாரவர் வெல்

மாண்டார் பாண்டவரென்றால்
மனதுயர் நீங்கிடும்
வஞ்சனைருதுகள் வன்னியிலெறிந்திடும்
வண்டணிகுழலாள் தொண்டிகள்புரிவாள்
அண்டையிலனுதினம் யாண்டுமேயாவாள் வெல்

## துரியோதிரன் விருத்தம்.

எந்தனிடயெண்ணம்போலே சொன்னாயன்று
இதுநல்லஇயற்கை இது இதற்குவேறு
குந்தகமொன்றில்லை இந்தவனமேசெல்ல
கோதையருமனவேகமேகவென்றால்
அந்தகனும்அனுப்பவொண்ணான் ஆகையாலே
அதற்கேற்றஉபாயமொன் றில்லையேயென்றான்
சிந்தையில்வேறுசொல்லினும் வேர்செய்மாமன்
இரியனுக்கு வழிகூட்டசெப்பலுற்றான்.

வசனம்

அகோவாருமன்னு கர்ன்னராசனே யென்மனது யெண்ணம்போல்சொன்னீர் இதுவேசரி இப்படியல்லவோயோசனைசரியாயிருக்கவேணுமன்று ஆகிலும் சிறப்பாகபெண்டுபிள்ளைகளுடனே நாமெல்லாம்கூடி அந்தவனமேயேகமது தந்தையாகிய திருதராட்டிதமகாராசன் அனுப்பசம்மதிக்காரே இதற்கு என்னயோசனை செய்வோமென்று துரியோதனன் கேழ்க்க மாமனாகிய சகுனி சொல்லுகின்றான்.



## சகுனி விருத்தம்.

ஆசையெனமருகாகேளும் ஆயரை அரசன்பக்கல்
பாசமாயேகச்சொல்லி பசுக்களைமிருகம்கொன்று
நேசமாய்வனத்தில் நீங்காமலிருக்குதென்றால்
வாசமாய்வேட்டையாட அரசனுமேகச்சொல்வான்

வசனம்.

கேளும் என்னுடைய மருமகனாகிய துரியோதனமகாராசனே நம்பிடபசுக்கூட்டங்களைசவரட்சணைசெய்துவரும் யாதவாளைபெரியஅரசனிடத்துக்கனுப்பி வனத்தில்மிருகங்கள் மிகுந்துபசுக்கூட்டங்களில் புகுந்து அதகஞ்செய்கிறது அதுவுமன்றியில் அவ்விடத்தில்வாசமாயிருக்குதென்று சொல்லச்சொன்னால் அப்போது நான் அவ்விடத்தில் இருந்துவேட்டையாட நாமெல்லாம் போகும்படிக்கு உத்திரவுபெற்றுவருகுறேன் மருமகனே.

துரியோதிரன் வசனம்.

மாமாயிதுவேசரியிதுவேசரி இதற்குவேறொருயோசனை இல்லை அப்படியேசெய்யவேணுமாமா

## அகவல்.

அரசனும்சம்மதித்தாயவர் தந்தைபால்
விரகுடனேகவிடைகொடுத்தனுப்பி
மாமனும்தானும்அருகினிலிருந்தார்
கோவலரோடிகொற்றவா கேளும்
வனத்தினில்மிருகம்வம்சமுமபெருகி
அனந்தமேசெய்து ஆவுகள்தன்னையே
யெங்களால்காக்க இயல்பல்ல இனிமேல்
உங்களாலான உதவிகள்செய்வீர்
என்றுமேசொல்லயேங்கியேஅரசன்
அண்டையிலிருக்கும் அந்தானைகேளும்
இந்ததோர்திக்கு என்னயோசனையென
வேட்டைகளாடி மிருகங்களனைத்தும்
ஓட்டிவிட்டப்புறம் ஒழித்துமேவருவாய்
ஆழிதுயெவர்கள் அடவிசெல்வார்தான்
என்றுமேஅரசன் யேக்கமாய்கேழ்க்க
ராசனும்கவடன் நாங்களும்யேகி

வாசமிகுவனத்தில் வனமுள்ளமிருகம்
அனந்தமோதாந்தி ஆடவிளிட்டன்று
வருகுவோமெனவும் அரசனும்கேட்டு
எருகவெனவும் விடையளித்தனனே.

பொதுவசனம்.

இந்தப்பிரகாரம் திருதருட்டியனிடத்தில் துரியோதனனவனத்துக்குப்போக விடைபெற்றுக்கொண்டு தனது தேவியாகிய பெருந்திருவாளை யோசனை செய்வதற்காக நந்தாவனத்தில் அழைக்கிறவிதங்காண்க.

துரியோதிரன் கவி.

ஏவல்கட்டியனே பாவையாள்தன்னை
ஆவலாயிங்கு அழைத்துவா நொடியில்

பொது விருத்தம்.

மதிமுகவனிதையான வஞ்சியாள்கேள்வியுற்று
அறுவிதமணிகள்பூண்டு அலங்கரித்தன்புகூர்ந்து
நதிபெரும்பூங்காவுக்கு நற்பெரும்சிவிகையேறி
பெருமையாய்பெருந்திருவாளும் பிரியமாய்வருகின்றாளே



பெருந்திருவாள் தரு.

பெண்களுக்கரசியாள் தங்கப்பல்லக்கிலேறி
பெருந்திருவாள்வாறாள்
கங்கையரிருபுறம் கனினசங்கீதம்பாட
அன்புள்ளதாதிமார் அழகுசாமரைவீச-சுருள்



இவள்அன்னப்பேடை உன்னிதக்கிளிபோலே
கன்னலெவிகரென்ன மின்னலையொத்தவள் (பெ)
சந்திரமுகமலர்ந்து சரிகைப்பட்டாடையின்ன
சித்திரத்தினப்பணிகள் மெய்யிலநேகம்துள்ள-சுருள்
விஞ்சிதமஞ்சித கொஞ்சிதகிளியாள்
வித்தகியர்ப்புத சுந்தரிமயிலாள் (பெ)
கொங்கைக்குடங்களிருதங்கக் கலசம்போலே
கோதைச்செங்கைவளையல் பாதச்சிலம்பசைய-சுருள்
குவலையமங்கையர் தவநிலையிவளென
குமரிபருவமிவள் சமரிகையிலதொரு (பெ)
அர்ப்பதக்கொடியோனுக்கு அற்புதமாலைசூட்டும்
கர்ப்பிணிஉயர்ந்தவள் பொற்பிரபைநிகளிவள்-சுருள்
கருநிறமேனியன் அருதிருமால்மகள்
கஞ்சனிவனுடைய வஞ்சகமேசெய்தாள் (பெ)

வேறு தரு.

வந்தனமையா பக்தவத்ஸலா
வந்தனமையா

வந்தனமிந்திர சந்திரகுலேசா
வடிவுள்ளமதனா கெடிவுள்ளசுதனா வந்
ராசாதிராசனே ராசமார்த்தாண்டனே
நற்குலகொழுனனே அற்புதஅழகனே வந்
குருகுலத்தரசனே கொடிநாகத்துவசனே
கோதையாழகியே காதல்மன்னவா வந்
யெந்தனையாளுமையா ஏகசக்ரேசபரா
இன்பமனோகரா அன்புள்ளநாயகா வந்

துரியோதிரன்கவி.

மாதேயென்மானேவாழி வடிவுள்ளபெண்ணேவாழி
ஆதரக்கிளியேவாழி அன்புள்ளமயிலேவாழி
சாதரமென்பாதத்தில் தாழ்ந்திடும்தையல்வாழி
கோதைநல்லாளேவாழி குலக்கொடிகொம்பேவாழி

பெருந்திருவாள் விருத்தம்.

மன்னவாபிராணநாதா மங்கையாளென்னை இந்த
உன்னிதபூங்காவுக்கு உத்தமசபைமுன்பாக

ஏனனகாரியத்தினாலே இவ்விடமறைந்தசேதி
இன்னதென்றடியாளுக்கு இயம்புவீரரியத்தானே

### துரியோதிரன் விருத்தம்.

தையலேகேளுமெந்தன் தாயாதிநூவராஞர்
வையகமனைத்துந்தோற்று வனமதுக்கேகினார்கள்
மெய்யெல்லாம்பணிகள்பூண்டு விசித்திரத்தேரிலேறி
சையோகமாகச்சென்றால் தாளாமல்மடிவர்தாமே

வசனம்.

அகோவாரும் பெண்ணே அதோ பாண்டவர்கள் சகலமும் தோர்த்துகானகம்போய்கந்தமூலங்கள்புசித்துஉருமாறியிருக்கிறதாய் கேள்வி நாம் சகல ஆடம்பரத்துடனே தேரிலேறிக்கொண்டு அந்தவனம்போனால் நம்மைபார்வையிட்டு துரோபதைவெறுப்பிலே இறந்து போய் விடுவாளென்று கர்ணர் சொல்லுகிறார் போய்வருவோம்வாரும்பெண்ணே.



## பெருந்திருவாளுக்கும் துரியோதனனுக்கும் தர்க்கம்.

### பெருந்திருவாள் தரு.

| | |
|---|---|
| போகவொண்ணாதரசே | வனத்துக்கு |
| போகவொண்ணாதரசே | |
| நாகக்கொடியுடைய | ராஜாதிராஜமன்னா |
| நல்லதல்லபிராசொல்லவும் | நகையாரோ போக |



### துரியோதிரன் தரு.

| | |
|---|---|
| பெண்ணரசானமாதே | போனால்நமக்கு |
| விண்ணங்கள் | வாராதோடி |
| எண்ணமறியாமல் | வன்வீணாய்பேசுகிறாய் |
| புண்ணியவதியேநாம் | போகப்பிரயாணப்படுங்கடி - பெண் |

### பெருந்திருவாள் தரு.

| | |
|---|---|
| சூதாடிகெலித்தீரே | அந்தபாண்டவாளை |
| காட்டாளவிடுத்தீரே | |
| நாடாளும்ராசர்முன்னே | நங்கையேபங்கமும்செய்த |
| கோடானகோதிவசம் | கௌர்த்திடும்யோசனை(போக) |

### துரியோதிரன் தரு.

| | |
|---|---|
| யேதிதுபெண்மதியோ | அடிபெண்ணே |
| நீதிதுவென்று | சொன்னாய் |
| காதலவோடியே | கன்னியவனம்போக |
| தளராமல்நெருங்கியென் | பின்வாராய்-பெண் |

### பெருந்திருவாள்-கவி.

எந்தனைவனத்துக்கேகவேயழைத்தீர்
வந்தேன்மன்னவிடுக்கொணாதே

### துரியோதிரன் விருத்தம்.

வருகவொண்ணாதேயென்ற வஞ்சியேமானேதேனே
திருக்கொன்றுமெண்ணிடாமல் செப்பியென்வார்த்தைகேளும்
புருஷனார்சொல்கேளாத பெண்களுக்குரியகர்ப்போ
மறுத்தொன்றும்சொல்லிடாமல் வருகுவாய்வனத்துக்கேக.

### பெருந்திருவாள் விருத்தம்.

புருஷனார்சொல்லும்வார்த்தை பெருந்திருவாள்கேட்டு
குருடனார்மகனுனதால் குறைவீதென்றெண்ணவில்லை
திருக்கொன்றுமெண்ணிடாமல் தேவியென்தங்கைமாரே
வருவிதிதப்பாதம்மா வனத்துக்குயேகுவோமே.

வசனம்.

இந்தப்பிரகாரம்புருஷனாகிய துரியோதனமகாராசன்சொன்ன நீதியை பெருந்திருவாள்கேட்டு இனி மறுத்துச்சொல்வது சரியல்லவென்று யோசித்துவரும் விதிதப்பாதென்று சொல்லும்பழமொழி

பிசகாது ஆகையால் நாமெல்லோரும் சிறப்பாக வனத்துக்கு போவோமடியம்மா தங்கைமார்களே.

துரியோதிரன் விருத்தம்.

தேரினையலங்கரித்து திவ்வியபரிபூட்டி
சீருள்ளகர்னன்மாமன் செல்வருந்தம்பிமாரும்
நேருள்ளமனைவியானோர் நேர்த்தியாபரணம்பூண்டு
காருள்ளவனத்தைநோக்கி கடுகியேவருகின்றாரே.



## துரியோதிரன் தரு.

நாற்றுவரும் — தேவிமாரும்
நேர்த்தியாக — தேரிலேறி
சேர்ந்துவன — கேகவென்று
செழிப்புடன் — வாறார்
மந்திரி — படைத்தலைவர
மாமன்சகுனி — கர்னன்
விந்தையாகத் — தேரிலேறி
விரகுடன் — வாறார்

மந்தையில்பசுவேங்கை — வதைக்குதென்றுகூது
அந்தகனும்வழிகூட்ட — அரசனும்வாறார்
வேட்டையாடவேணுமென்று — வேடவீரர்கூடனே
காட்டைநாடிகூட்டமாக — கடுகியேவாறார்





## துரியோதிரன் வேட்டையாடுவது.

வேறு-தரு.

வனத்திில்மிருகவேட்டை — யாடுவோமாமா
அண்ணாவனத்தில்மிருக — வேட்டையாடுவோம்
கனத்தவேங்கை — நரிகள்பன்றிகள்
இனத்தைதேடியே — ஓடுதுபாரீரோ
சுத்திபார்க்கு — வில்லம்புகள்பூட்டியே
குத்தியடித்து — குடலைசரியுங்கள்
மதத்தமிருகங்காட்டில் — கூடியேஅனேகமாக
வதைக்குதுபசுமந்தை — [illegible]மிதித்து
சினந்துக் — [illegible]ங்கள்
கொடியவுயிரினை — கொடியினிலேயேவ வன
வேடரேவேட்கூடகானை — உசு[illegible]
வில்லம்புகள்பூட்டியே — விசையுடன்[illegible]
குலையில் — [illegible]
நாடரியாமன்னர் — ஓடிவளோ[illegible]
காவலரேங்கள் — [illegible]வலாயோதிவீர்கள்
மந்திரிபடைத்தலைவர் — [illegible]வெகுவிதமாய்
மானும்பன்றியுமுயலுங் — கூடுதுபார்
விந்தையாகவே — விழித்துப்பார்க்குது
வெடியைபோட்டுயிர் — கொடியிலேநில்வாங்குவீர் வன

## போது விருத்தம்.

வேட்டைகளாடிவிரகுடன் பசுக்கள்மந்தைக்கு
கூட்டமாய்கூடிவந்து கோவலர்பரிகமீந்து
நாட்டமாய்சித்திரசேனன் நங்கையர்கிரீடைசெய்யும்
காட்டினில்தடத்தைக்கண்டு கவுரவர்இரங்கினரே.

வசனம்.

இந்தப்பிரகாரம் வேட்டையாடி திரும்பினோராக பசுமந்தைக்கு வந்து பசுக்களை மேய்க்கும் யாதவாளுக்கு வேண்டியவெகுமதிகொடுத்து சித்திரசேனன் பத்தினிமார் ஜலக்கிரீடைசெய்யும் தடாகத்தைக்கண்டு ஆயாசந்தீர்த்துக்கொண்டிருக்கும் சமயத்தில் அத்தடாகத்தைக்காக்கும் கந்தருவர் மிரட்டுகிறவிதங்காண்க.

## துரியோதிரன் சொல் தரு.

இந்தவனதடத்தை காப்போருன
எழிலிசைக்கும்வல்லகாந் தருவரார்ப்ப
விந்தையைகண்டவுடன் துரியனப்போ
விஷம்போலேசீரி மிகக்கோபங்கொண்டு
பசுமுள்ளதம்பியரே நீங்களேகி
பஞ்சைகள் கெந்தருவரையோட்டிவிட்டு
சிந்தைமகிழ்ந்தே சேதிசொல்லுவீரென
சீக்கிரமாய்வில்லெடுத்துச் செல்லுவீரே.

வசனம்.

சித்திரசேனன் பூங்காவனத்தையும் நதியையும் காக்கப்பட்டு நின்ற காவலாகிய கந்தருவரிருக்கும் அரவத்தை துரியோதிரன் கண்டு கோபாக்கினிமீறி தன் தம்பிமாரைப் பார்த்து நீங்களந்த கந்தருவரிடம் போய் நொடிப்போதில் அவ்விடம்விட்டோடும்படி துரத்திவிட்டு சேதி வந்து சொல்லுங்களென்று சொன்னான்.

கவுரவர்கள் விருத்தம்.

கந்தருவகூட்டமிங்கே வந்ததேது
கவுரவர்களெங்களிடதேவிமாரும்
சிந்தைகளித்திவ்விடத்திலிரங்கினோங்காண்
சேதிப்போம்உயிர்தப்பி ஓடிப்போவீர்



வசனம்.

அகோகேளுங்கள் கெந்தருவரே நீங்களிவ்விடம் வந்ததேது நாங்களோ அஸ்திநாபுரிபட்டணம் ஆளப்பட்ட துரியோதனாதியர் எங்கள்தேவிமாருடன் இவ்விடத்தில் இரங்கி இருக்கிறோம்நீங்களிவ்விடத்தில் இருக்கப்படாது உயிர்தப்பி ஓடிப்போங்களடா கந்தருவரே.

கந்தருவர் விருத்தம்.

கந்தருவன்சித்திரசேனன் எங்கள்ராசன்
தேவியரோடிந்நதியில் கிரீடைசெய்வார்
கூரமனிதரிடமிரவங்கண்டால்
சங்கரிப்போம்உயிர்தப்பி ஓடிப்போவீர்.

கந்தருவர் வசனம்.

அகோகேளுங்கள் கவுரவர்களே யெங்களரசனாகிய சித்திரசேனன் தேவிமாருடன் இந்நதியில்சலக்கிரீடைசெய்வார் மற்றமானிடராகிலும் இவ்விடம் நடக்கூடாது அப்படியல்லவென்று ஆருவதுவருவாராகில் அவர்களுயிரை எமலோகம் அனுப்பிவைக்கும்படியான காவலர் நாங்கள் இப்பவும் நீங்களுயிர் தப்பி ஓடிப்போனால் சுகம் இல்லாவிட்டால் உங்களுயிரை எமபுரத்துக்கு அனுப்பிவைப்போம் கவுரவரே.



## கவுரவருக்கும் கந்தர்வருக்கும் தர்க்கம்.

கவுரவர்சொல் தரு.

ஏதடாகெர்வமோ அடா எங்களை
வெல்லவுங் கூடுமோ
நாடாளுமெங்கள்ரத கஜதுரகமும்
நால்வகைச்சேனைகள் காப்பிவீரர்கள்
ராஜபலன்தெரியாதோ யெங்கள்
வல்லமை யறியாயோ
அடாமூடரேசொல்வினு மிவ்விடம்நின்றால்
முடித்திடுவோமுயிர் மடித்திடுவோம் வீர

கந்தருவர்-சொல்-தரு.

கந்தருவருக்கும் சமர்த்தரோ
கர்ப்பிதையால்நீங்கள் வெல்வீரோ
சுந்திரசித்திரசேனன் வில்லெடுத்தாலுமே
சூரர்வீரர்தேவர் மூவரென்றாலுமே
சொல்லும்பய னறியாதோ
அவன்வெல்லுந்திறம் தெரியாதோ
துஷ்டப்பயல்களோ கிட்டநெருங்கினால்
கட்டிப்பிடித்துத்தலை வெட்டிதுண்டாக்குவோம்-கந்த

கவுரவர்சொல் தரு.

புலியைப்பூனைவந்து வெல்லுமோ - உங்கள்
சமர்த்தெல்லாமினியிங்கே செல்லுமோ
வலியவில்பூட்டி குணத்தொனிகாட்டியே
மதத்தயானைபோலே யெதிர்த்தோம்
இன்னமும்உமக்குமன்னர்பலம் தெரியாதோ
எங்களண்ணன்துரி யனென்றறியீரோ
வங்கை யொடுக்கிறீர்
தங்கும்வீரமாதல் யெங்கள்கையம்பினால்
பங்கமும்பட்டு போவீர் புலி

கந்தருவர்-சொல்-தரு.

ஆனைசிங்கத்தைவெல்லுமோ உங்கள்
ஆக்கிரமினிஇங்கே செல்லுமோ



வானுலகத்தரசானும் சித்திரசேனன்
வன்மையுங்கீர்த்தியும் உண்மையங்கெந்தருவர்
வர்மமனிதரிவரோ யெங்கள்
சிரமம்நீங்கள் தெரிவீரோ
மந்திரபலத்தினால் பாணந்தொடுத்திட்டோம்
மருந்திடுவீர்-உயிர் வெருத்திடுவீர் ஆ

பொது விருத்தம்.

கந்தருவர்விடுங்கணையால் கவுரவாளும்
கலங்கிமனங்கொதித்து பயங்கொடுத்துஓட
விந்தையென்னமந்திரமோ அவரைவெல்ல
வித்தகனேஎங்களா லாகாதென்றார்
சிந்தைமனமுருகிவிட்ட பாம்பைபோலும்
துரியனுமேவில்லெடுத்து தேரிலேறி
பந்தமுள்ளபடைமுகத்தில் கர்னன்நோக்க
புலவீரசகுனிபின்னு மெதிர்த்திட்டானே.

வசனம்.

இந்தப்பிரகாரம் மந்திரபலத்தினால் அநேகபாணந்தொடுத்துவிட அந்தபாணத்தினால் துரியோதனனிடத்துக்குப்போய் கேளும் அண்ணாவே கெந்தருவருக்கு தெய்வபலமிருக்கிறது அவர்களைவெல்லுவதற்கு எங்களாலாகாதென்றுசொன்னமாத்திரத்தில் துரியோதனனும் விஷப்பாம்புபோல் சீறிகோபம்பிரவேசித்து யுத்தசன்னத்தனாய் தேரேறிபுறப்பட்டபோது கர்னன் படைமுகத்தில் யுத்தவீரனாகவும் தம்பிமார் படைத்தலைவரும் இருபக்கத்திலும் சகுனிபின்னணியிலும்இருந்து யுத்தம்செய்கிறவிதங்காண்க.

கவுரவர் தரு.

ஆரடாகெந்தர்வரே நில்லுங்கள்
உங்களாண்மை வல்லமைகளால் வெல்லுங்கள்
யாரடாசூரரேசேனையும் / வீரரும்
படைமன்னர்தேர்கடவொலி மிகுக
பகரும்கருத்தறிவீரோ யெங்கள்
நகரம்உருதெரி வீரோ
அடாவீணைமீட்டிப்பாடும் வித்தகபசனே
விட்டகணையைநீங்கள் தட்டிவிட்டுயிர்காப்பீர் ஆரடா

கந்தருவர்-சொல்-தரு.

வீரசவுரியம்பேசுமன்னரே. நீங்கள்
விட்டகணையைதடுத்தோம் கர்ணரே
ஆர்ப்பாட்டஞ்செய்து அண்ணன் தம்பிமாரும்
அடர்ந்தபடையுடன் காட்டுதடிகள்போலே
ஆண்பிள்ளைசமத்தரிந்தோமே உங்கள்
வீம்புகள்மிகத்தொலைந்தோமே இதோ
அரிப்பாய்மந்திரகணை குறிப்பாய்விடுகிறோம்
செரியாய்முன்னின்றுநீர் சரியாய்துண்டிப்பீரே , வீர

கவுரவர்-சொல்-தரு.

ஆனாலுமுங்களால் வெல்லவுமாகுமோ
யெங்களாஸ்திரபலன் தப்பிபோகுமோ
அட்டாவடனாட்டுதேவர்கள் மந்திரவுபதேசமும்
வல்லமைவில்திறம் கொல்லம்புபாணமும்
வண்மைநீங்களறிவீரோ யெங்களுண்மை
நீங்கள்தெரிவீரோ அடா
மந்திரகுரங்கைபோலே வந்தெதிர்நிற்கின்றீர்
விந்தையாய்பாணம் விட்டோம்
விடுவித்துகொள்வீரே ஆனால்
மன்னர்வில்லம்பு நாலயனேநாங்கள்
வானுலகம்போவோம் மெய்யனே
குண்ணமில்லாமல் குளக்கரைகாத்திட்டோம்
குவலையமன்னர்க்கு கொள்ளையாய்கொடுத்திட்டோம்
குற்றங்களெண்ணுதவீரரே நாங்கள்
செத்தாலும்வறவில்லை சூரரே
வெற்றிகொள்ளவந்த வீரரேநாங்கள்போய்
சித்திரசேனனுடன் சேதிசொல்கிறோம்

கெந்தருவன் விருத்தம்.

சந்திரகுலத்தரசர்களில் நால்வர்கள்
தடக்கரையிலிறங்கலுற்றார் ஒன்றுமென்றோம்
வில்லெடுத்தாரெதிர்த்தோர்மேலும்
விட்டகணையால்மெலிந்துவந்தோமெள்ள



பொது விருத்தம்.

கெந்தருவர் சொல்லக்கேட்ட
சுந்திர சித்திரசேனன்
சிந்தையு மிகக்கொதித்து
சேனையொடுதேரேறி வருகின்றானே.

வசனம்.

இந்தப்பிரகாரம் கெந்தருவர் காவலர்பயந்தோடி அய்ய மய்ய மென்று தங்களெசமான் பாதத்தில் வீழ்ந்து சொன்னமாத்திரத்தில் கோபம் பிரவேசித்து யுத்தசன்னத்தனாய் நால்வகைச்சேனைகளுங்கூட்டிக்கொண்டு மகாவிசித்திரமாகிய தேரிலேறி சித்ரசேனன் வருகிறசிங்காரம் காண்க.



சித்திரசேனன் தரு.

தீரன்சித்திரசேனன் வந்தனனே தேரினிலேறி
தீரன்சித்திரசேனன் வந்தனனே

வானுபூமிவனங்களதிர்ந்திடவே அண்டங்களுள்ள
மதியுஞ்சூரியன் வந்துவணங்கிடவே
பின்னிலுமுள்ள தேவர்மலர்மழைபொழிய
இந்துப்பாலகர்வாழ்த்திட செயங்கள்கூறிட - தீர

வனத்தில்மாதவஞ்செய்யுமுனிவர் ரிஷிகளெல்லாம்
வந்துமுன்னதாயாசிகூறவே யெங்கெங்கும்வீரர்

கனத்தகேடையம் கத்திராங்கிடவே
காலகேயர் கண்டுவணங்கிட-தீர

நங்கைமார்கள்கவரிவீசிடவே யிருப்புறமும்
ருசருசர்கட்டியங் கூறிடவே
பேரிகைசின்ன மேளவாத்தியமுழங்கிட
மேட்டிருனுவவில்பூட்டி வணங்கிட-தீர

யாருபாருஅதிகாய சூரர்களும்
தேசதேசர்கள் கப்பங்கட்டிடும்
ருசருசர்களும் புனைடகள்சூழ
தேவதேவனிவ னொன்றயென்னிட
திக்குமெட்டுமேவர் கீர்த்தியோங்கிட-தீர

## விருத்தம்.

நதிக்கரையில் வந்திரங்கிய மனுஷப்பேய்கள்
நாட்டிமேகூடாதிப்புரம் போவென்றால்
சத்தியக்காவலர்மேல் சண்டைசெய்யும்
சகோதரரைவனம்போகவிட்டப்பாவி
விதியிதுவோ யுன்சிருஷ்டித்தபிரம்மா
விரைவாகஇவ்விடத்தில் வரச்செய்தானோ
கெதியிதுவோவில்லெடுத்து யுத்தம்செய்தால்
கிடுகிடெனநடுங்க உயிர்கொல்லுவேனே

வசனம்.

அடா கேளுங்களடா எனது சிங்காரம்பொருந்திய நதிக்கரையில் நீங்கள்வந்திரங்கினுல் இவ்விடத்தில் இருக்கப்போகாதென்று சொன்ன எனதுகாவலர்மேல் யுத்தஞ்செய்யும் சகோதர துரோகிகளா நீங்களிவ்விடத்தில் வந்தகப்பட்டது உங்களை சிருஷ்டித்தபிரம்மா சலுதியில் இவ்விடம்வரச்செய்தாப்போலிருக்கிறது ஆகிலும் விஸ்தாரிகளால் யுத்தஞ்செய்யுங்கள் பார்ப்போமடா காவலர்களே.





## சித்திரசேனனுக்கும்கர்னனுக்கும்யுத்தம்.

சித்திரசேனன் தரு.

எரியம்புயீட்டி பாணந்தன்னையே சித்திரசேனன்
எடுத்துகர்னன்மீதில் விட்டானே
புரியும்யானைத்தேரு சாரதிதலைகள்தன்னையே
பரித்துதரித்து குவித்துவிட்டானே

கர்னன் தரு.

குதித்துகர்னன்துடித்து பாணத்தைவிசையதாக
கோரிகெந்தருவன்மீதி லெரிந்தானே
தரித்தமுடியும்பட்டம் தன்னையேயறுத்து
சாரதிதலைகள்விழப் பரித்துவிட்டதே

சித்திரசேனன் தரு.

இந்தக்கையரில்சித்திரசேனனும். கோபமீறியே
எடுத்துசரங்கள்மாரி பொழிந்தானே
விந்தையாகவேகவுரவர் படையை
பஞ்சுபஞ்சாய்விரைத்து ஒடும்படிசெய்தானே

கர்னன் தரு.

கெந்தருவாஇந்தகெர்வமேதடா மன்னரைவெல்லும்
கையைதுணித்துவிடுவேன் பாரடா
குந்தம்வாளும் பரிசையேவீயே சித்திரசேனனை
குலைகலங்கிடநடுக்கச் செய்தானே

சித்திரசேனன் தரு.

பாணமைந்தரிவனடா பாஞ்சாலன்வில்லை
பந்திவளைத்த வல்லமைதானடா
யோகமாகவே இடிமுழக்கம்போல்
கெந்தர்வன்பாணத்தால் யேக்கமாய்கர்னன்சோட்டானே

கர்னன் தரு.

ஆக்கிரமித்துகோபமீறியே அங்கதேசத்தோன்
அர்த்தசந்திரபாணம்விட்டானே சாக்கிரதையாக
இருந்தகெந்தருவன் தேரையழித்து
சாமிசாமியென்று சாடிவிட்டதே.

சித்திரசேனன் தரு.

மூவர்தேவர்தந்தபாணத்தை உபதேசம்செய்து
மூடிகர்னன்மேலே விட்டானே
மேவிச்சகம்கோடிகோடியாய் திக்குகளெல்லாம்
விரைந்துருவிந்துமூடிக் கொண்டதே

கர்னன் தரு.

குருவின்சாபம் வந்ததன்றேமேகராசனும்
குலைந்துமெலிந்து கடுங்கின்றானே
அருமைம்நினைவழிந்து சோர்ந்துமேமெள்ள
நழுகிஅருகிலிருந்த புதரில்நுழைந்தானே

விருத்தம்.

முன்னணியில்நின்ற [illegible]ர்னன் குதிரைதேரும்
முரிந்துபலஜெனங்களு மடிந்துபோது
பின்னுமதாய்புரங்கொடுத்து ஓடிப்போனன்
புரமிருந்தமாமனுமே புதரில்புகுந்தான்
சின்னமீதென்றெண்ணதே தம்பிமாரே
தேவியரோடேபிணைத்து சிறையில்போட்டான்
மன்னவனும்துரியன்மிக கோபங்கொண்டு
வடவனல்போல் பாணசரம்தொடுத்திட்டானே.

வசனம்.

படைமுகத்தில் முன்னின்றகர்னராஜன் தேர் குதிரைசாரதியும் பலபடையும் அழிந்துபோனதுந்தவிர தானும்பிரமித்து புறங்கொடுத்து ஓடிப்போனதை பார்த்திருந்த சகுனியும் பின்னிட்டுஅவ்வனத்துபுதரில் ஒளிந்தான் அப்போது சித்திரசேனனும் இதுசமயமென்று துரியோதனன்தவிர மற்ற தம்பிமாரும் அவர்கள் தேவிகளையும் பிடித்துபிணைத்து சிறையில் போட்டான் அப்போது துரியோதனனும் கோபங்கொண்டுபாணந்தொடுத்து யுத்தஞ்செய்யத்தொடங்கினன்.





துரியோதனனுக்கும் சித்திரசேனனுக்கும் யுத்தம்.

துரியோதனன் தரு [illegible].

தத்தனம்தனத்ததனதனனு சிறைபிடிக்க நீ
வல்லமைக்காரனோ அடா சித்திரசேனா
திங்கள்குலத்தைநீ வெல்லக்கூடுமோ
நிறையதாகவே அக்கினி அஸ்திரத்தை எடுத்துக்கோரி
நிகரிகெனவே தொடுத்துவிட்டானே

சித்திரசேனன் தரு.

திங்கள்குலத்துநீங்கள் வல்லமைதானுமே
அடாதெரிவே னறிவேன்
சிரேஷ்டன்தேவியை துயில்களைந்தவா
பங்கயமாகவே உலவாபிடித்துமே அடாபாவி
பத்திசிறைபோட்டு பெருகுன்றே

துரியோதிரன் தரு.

எந்தன் தம்பி அர்ச்சுனராஜன் வில்லெடுபட்டு
ஏங்கிக்காலில் விழுந்தவனாடா
விந்தையாகவே பாணபிரயோகத்தை
கெந்தருவன்மீதில் வேணமட்டுக்கும்
விட்டெசிரி தேனே

### சித்திரசேனன் தரு.

வனத்திலோட்டபாத்தியம் தம்பியோடா
பங்கம்கெட்டால்வல்லாராரோ நில்லும்தம்பியோடா
சினத்துபாணத்தால் அனர்த்தமாகவே
கெந்தருவன்றிரியனை தேவாயுதித் துரிசைபிடித்தானே.

### துரியோதிரன் தரு.

வணங்காமுடி அரசனெந்தனையும் சிறையில்போட
வஞ்சமனதுகொஞ்ச மிரங்காதோ
குற்றங்களின்னதென்று அறிந்து
பாரடாசித்திரசேனா குற்றமாயெந்தனை
குலமையும் நகையாதோ

### வேறு தரு சித்திரசேனன்

கட்டுங்கடா இவனை கட்டுங்கடா
காவலரே ஓடி கட்டுங்கடா
துரியனையுமவன் தேவியையும்பிடித்து
சேர்த்துபந்தனமாக கட்டுங்கடா
துஷ்டனையுமவன் தேவியையும்பிடித்து
சேர்த்துபந்தனமாக கட்டுங்கடா
தம்பிமாரையும் பெண்டுபிள்ளைகளையும்சேர்த்து
தனித்தனியாய்பிணைத்து கட்டுங்கடா
சிர்குடம்தனில்தள்ளி மரக்கதலையடைத்து
இருகிலேபூட்டுகளை பூட்டுங்கடா

### விருத்தம்.

கெந்தருவன் இட்டபடி காவலர்கள்
அவரவரைபிடித்து யவர்தேவியோடும்
பந்தனமாகசேர்த்து பின்கைகட்டிகட்டி
பதைத்திடவேதள்ளி சிறைபோட்டாரப்போ
விந்தையுள்ளபெருந்திருவாள் புருஷன்தன்னை
விஷம்போலே சீறிமிகவெருத்துப்பொல்லா
சிக்கதுமனங்கலங்கிட்டாள் சொன்னவார்த்தை
செவிகேளாய்கெடுதியென்று இட்டுவாளே.

### வசனம்.

இந்தப்பிரகாரம் சித்திரசேனன் இட்டஞ்செய்தப்பிரகாரம்கவுரவரை அவனோர்தேவியோடும் சேர்த்து பின்கட்டாகக்கட்டிச்சிறைக்கூடத்தில் போட்டபோது பெருந்திருவாள் புருஷனாகிய துரியோதனன்மேல்விஷம்போலே சீறிவெருத்து முன்னமேசொன்ன புத்திகேளாத அவக்கேடு இப்படியாச்சுதென்று வைகிறவிதம்.





### பெருந்திருவள் தரு.

ஆகாதயென்னகங்கொண்டு அலைந்தபோதேயானும்
அடுக்காதுபோகவென்றேன் படுபாவி-இப்போ

சாகாமலுயிர்வதை தாளாமல்படலாச்சே
சதிகாரர்செய்வாரோ வெகுதோஷம்-அய்யோ
நீதியறியாமூடர் சாதனைசொல்கேட்டு
நீசிறைபட்டாயல்லோ வெகுதோஷி
ஆதியில்நான்சொன்ன அறிவுனக்கில்லாமல்
அழிவுகாலமாச்சே வெகுதோஷி
பொல்லாக்காலமிதுவுனக்கோ கல்லுங்கரையுமே
நான்கதறினேனது கேளாய்படுபாவி-இப்

கோலங்கொண்டிவ்வாறு கட்டுண்டால்
கோதையங்கைப்பாரே வெகுதோஷி-அய்யோ
பஞ்சவரைவரையும் பக்தியாய்கொல்வேனென்று
பண்ணும்யோசனைப்படி யெண்ணிவந்தாயேபாவி
அஞ்சிநாம்கட்டுண்டு சஞ்சலப்படலாச்சே
அய்யையோயிதுமோசம் வெகுதோஷம்

### பெருந்திருவாள் விருத்தம்.

தேவியெனும்பெருந்திருவாள் வையும்போது
துரியனுமேமனத்துயரால் கிலத்தைப்பார்த்து

பாவியர்கள்சொல்கேட்டு என்னைவிவந்து
பறதவித்துதவிக்கலுற்றோ மென்றுமென்னை
ஆவியில்லாபதுமைபோலே நின்றானிப்போ
அரிவையர்கள்சோகம் பெறும்படியேவினை
காவலனுமவர்முகத்தை பார்த்துபார்த்து
கதறுவான்மொழிக்குமொழி பிதற்றுவானே.

வசனம்.

இந்த பிரகாரம் பெருந்திருவாள் வையவும் துரியோதிரன் குனிந்துநிலத்தைப்பார்த்தப்படி புத்தியில்லாதவர்சொல்கேட்டு இப்படியாச்சுதென்று என்னைனி பதுமைப்போலே நின்றான் அப்போ ஸ்திரீகள் முகத்தைப்பார்த்து புலம்ப துரியோதிரன் புலம்புகிற விதம்

## துரியோதிரன் புலம்பல் தரு.

அன்னப்பசுங்கிளியே மின்னலொளிமாதரசே
அருஞ்சிறைபடவிதி அமைத்தானேபிர்ம்மதேவன்

பெருந்திருவாள் தரு.

மன்னவரேநீங்கள் மனதுயர்படவேண்டாம்
வரும்விதிதப்பாதைய்யா மன்னவரே.

துரியோதிரன் தரு.

சின்னஞ்சிறுவயதில் தேடினேன்மாலையிட்டேன்
தெய்வச்செயலோபெண்கள் சிறையில்கட்டுண்ணலாச்சே

பெருந்திருவாள் தரு.

ஆனாலும்பெண்கள்சிறை பட்டாலும்பேதகமில்லை
ஆண்பிள்ளைசிறைப்பட்டால் அவனியில்நகைப்பாரே

துரியோதிரன் தரு.

அறுசுவையோடுண்டு புருஷரைக்கூடியிருந்தீர்
அருமைத்தேவியர்நீங்கள் பெருமைகுலையலாச்சே

பெருந்திருவாள் தரு.

உண்ணவும் உடுக்கவும் இல்லாமல்போனாலும்
உருகுகட்டிருகு உயிர்தழைப்பாகுதே



துரியோதிரன் தரு.

தாயார்தந்தையருங்கள் தாழ்ச்சியைகேட்டாரானால்
சாபிப்பார்கோபிப்பாரே தேவரேயென்னசெய்வோம்

பெருந்திருவாள் தரு.

கோபமேன்செய்வாரையோ கொழுநனார்படுந்துன்பம்
கொடும்வினையகற்றியே விடுவிக்கவேண்டுமைய்யா

## துரியோதிரன் விருத்தம்.

பெண்களேகேளீரிந்த பிசகுமேயெளிதமாய்
சங்கையென்னுமெனக்கு சகித்துமேயிருப்பீரகில்
பங்கமேடாயாசந்தான் பட்டுமேதீர்ந்தபின்பு
மங்கையேகேளுவர்சேனை மாய்த்துமேவிடுவிப்பேனே.

வசனம்.

அஹோகேளும்பெண்களா இந்தசிறைப்பட்டபிசகை நாணப்படாமல் சற்றுநேரம்பொறுப்பீர்களானால் எங்களாயாசந்தீர்த்துக்கந்துருவானை வென்று நம்மிட சிறையை மீட்டுக் கொள்ளுவோம் மடிபெண்களா.

## துரியோதிரன் தரு.

தேரேறியென்னைவந்த யென்னமும்போச்சுதே
சித்திரசேனனால் கட்டுண்ணலாச்சுதே
மாமாமாமாசகுனிமாமா நீவாராயோ
மருகர்படுந்துயரம் வந்துநீபாராயோ
அங்கதேசத்தரசே அண்ணாகர்ணாவாராயோ
அருமைதம்பிகள்படும் அவதிகள்பாராயோ
நம்பிஉங்கள்வார்த்தையை கேட்டிந்தபாடுபட்டோம்
நாங்களும்சிறைபட்டு சாயிலுங்கடையானோம்

## கவுரவர் விருத்தம்.

துரியனுமேமனந்துயருல் சிறையிருந்தான்
சித்திரசேனன் கையில் சிக்கியேமன்னா
பரிவுடனேபாண்டவர் வாழிடமேசென்று
பார்த்தீபாசரணமையா கெதிவேறில்லை
குருகுலத்தம்பிமார் நூற்றுவருமக்கள்கோதையரோடு
கூடிவனந்தனில் வேட்டையாடிச்சென்று
செருக்குடனே கந்தர்வவனத்திலுற்றான்
சித்ரசேனன்சிறைபிடித்து போட்டானே.

வசனம்.

இந்தப்பிரகாரம் துரியோதனன் பெண்டு பிள்ளைகளனைவரும் சிறைச்சாலையிலிருக்க இப்பால் சித்திரசேனன் பாணத்துக்குத்தப்பி ஓடிப்போனவர்கள் பாண்டவர்[illegible]த்துக்குப்போய் தர்மராசரைக்கண்டு அவர்பாதங்களில்பணிந்து சரணஞ்சரணமய்யா ராசபரமேஸ்பரா நாங்களோ தங்களுக்கொரு சேதிசொல்ல வந்தோம் அதென்னவெனில் உனது பெரியதகப்பனார்பிள்ளைகளாகிய தம்பிமாரும் அவர்கள் பெண்டுபிள்ளைகளுடனே வேட்டைக்குவந்து சித்திரசேனன் தடாகக்கரையிலிறங்கினார்கள் கந்தர்வசேனைகளும் அவர்களரசனாகிய சித்திரசேனனும் யுத்தம்செய்து நூற்றுவரையும் அவர்கள்தேவிமாரையும் கட்டி சிறைபோட்டிருக்கிறான் ஆகிலும் இன்னதாம் சொல்கிறோம்கேளுமையா சுவாமி



கவுரவர் விருத்தம்.

குற்றமேசெய்தபேரை கொல்லவேநீதிவேதம்
மெத்தவுமிடுக்கம்செய்வார் மென்மேலும் அபத்தானால்
பத்தியேகார்ப்போர்க்கிந்த பாரினில்புகழுங்கீர்த்தி
வெற்றியும்வேறொன்றில்லை வேந்தனே அரசர்கோவே

வசனம்.

கேளுந்தர்மராசரே குற்றமானபொல்லாங்குசெய்தபேரை கொல்லுகிறதேகாரியமென்று மனுநீதியில் சொல்கிறது அப்படிகுற்றமிகுதியாய் செய்தவர்களுக்கு அவதிகள்மிகுதியாய்வந்தபோது காப்பவர்க்குபெருமையுஞ்சீர்புகழும் வெற்றியும் வேறேவேண்டியதில்லை ஆதலால் உனது தம்பிமாருக்கு வந்த இடுக்கமாகியசிறையைநீமீட்டுவிடவேண்டுமையா சுவாமி.



தர்மர் விருத்தம்.

மன்னர்கள்சொன்னபோது அருளதுசார்ந்து தர்மர்
பின்னவர்தம்பிமாரில் பெருந்திறல்வீமசேனன்
தன்னையேமுகத்தைநோக்கி [illegible]யேயெனிநீயும்
சொன்னசொல்தப்பாமல்தான் சுயோதனன்சிறைமீட்பாயே.

வசனம்.

இந்தப்பிரகாரம் தப்பிவந்த ராஜாக்கள் சொன்னவசனங்கேட்டு தர்மராஜனுக்கு தயவுவந்து தம்பியாகிய வீமசேனன்முகத்தைப்பார்த்து என்சொல் தவறாத தம்பிமார்களாகிய துரியோதனாதியரை சிறைமீட்டுக்கொண்டு வாருமப்பா வீமசேனா.



வீமன் விருத்தம்.

வீமனுங்கோபமீறி வெந்தழல்முகத்தில்வீச
தாமடாதீங்குசெய்வோர் படுவார்மேலும்
நேமமுந்தப்பாசித்திரசேனனும் வெற்றிபெற்றான்
நாமதுபார்த்திருப்பதல்லது உதவிசெய்யவோ அண்ணனே.

வசனம்.

இந்தப்பிரகாரம் தர்மராஜர் சொன்னமாத்திரத்தில் வீமசேனனுக்கு கோபமதிகரித்து முகத்திலக்கினிபொரிபறக்க சொல்கிறான் அடாத்காரியம்செய்தவர் படாதபாடு படுவார்களென்னும் பழமொழிப்படியே அவரவர்கள்செய்த தீங்கினால் சிறைப்பட்டார்கள் சத்தி

யந்தப்பாக கெந்தருவர்கள் செயம்பெற்றூர்கள் இன்னமும் கௌரோச்சியர் முதலானதும் கைபற்றினூலும் நாம் பார்த்திருப்பதல்லாமல் அவர்களுக்கு உதவிசெய்யலாகுமோ அண்ணாவே.

## தர்மருக்கும் வீமனுக்கும் தர்க்கம்.

தர்மர் தரு.

தம்பிஇதுவென்ன தர்மத்துக்கழிவோடா
தகிக்காதேயடிக்காதே வீமசேனா

வீமசேனன் தரு.

கல்லைகட்டிலழுத்தியே கடுவிஷம்மூட்டுவோர்
கடுக்குப்அடுக்கும் அல்லவோ அண்ணாவே

தர்மர் தரு.

தீங்குசெய்தவர்பின்னும் தீவினையனுபவிப்பார்
திஷ்டியால்பார்க்கலாமோ வீமசேனா

வீமசேனன் தரு.

சூதில்புவிகைகொண்டு துரோபதையைதுயிலுரிந்த
துஷ்டர்சிறைபட்டாலென்ன அண்ணாவே

தர்மர் தரு.

ஆனாலுமவர்செய்தா லநுபவிப்பாரய்யோ
அதினால்நமக்கென்ன வீமசேனா

வீமசேனன் தரு.

வீட்டில்கொள்ளியைவைத்த விரோதியைசிறைமீட்க
வேதமுமுரைக்கிறதோ அண்ணாவே

தர்மர் தரு.

கொல்லுவேன் நூற்றுவரை யென்றுகோரினாய்
வேறொருவர்கூரவல்லோ வெற்றிபெற்றால்வீமசேனா

வீமசேனன் தரு.

இதுவென்னகுரையாமோ இறக்கம்இருக்குமக்கு
இனியவார்த்தை யிதல்லோ அண்ணாவே

விருத்தம்.

தர்மருடன்தர்க்கமிடும் அண்ணன் வீமன்
வரிசிலையில்சரணம்செய் அருகிபார்த்தீபர்



தர்மமதாய்பெரியவர்தன்வார்த்தைதன்னி
மறுத்தவனென்றருகில் வீழ்வார்களப்போ
நிர்மயமாய்அரம்செயமே யென்றெண்ணி
நீங்கிசிறைமீட்டுவந்தால் சரியார்த்தம்
கர்மிகள்தாம்அவர்கள் செய்ததீங்கை
எண்ணுங்காரியத்தாலாவதில்லை அறிகுவீரே.

வசனம்.

இந்தப்பிரகாரம் தர்மருடனே தர்க்கம்செய்யும் வீமசேனனுடைய பாதாரவிந்தங்களில் அர்ச்சுனராசன் சரணம்செய்துகேளும் அண்ணாவே பெரியோர்கள் வார்த்தையை தள்ளினால் அவர்களுக்கு நரகமுண்டாமென்று வேதமுறைகின்றமையால் தர்மமே ஜெயமென்று நம்மிட தமையனார்சொல் தப்பாமல் சிறைமீட்டுவரவேண்டுமேயல்லாமல் கவுரவர்செய்த தீங்கை யெண்ணினால் ஒருகாரியம் ஒன்றுமில்லை அண்ணாவே.

## வீமசேனன் விருத்தம்.

விஜயனுமேசொல்லும்மொழி வீமன்கேட்டு
மெய்யெனவே இசைந்துதம்பிமாருங்கூடி
நிசமாகவிச்சேதிசொல்லும் நிலக்குதிரைதேரேறி
வில்லெடுத்துஇசைபாடிய் கெந்தருவக்கூட்டத்தை
இதுஎங்களண்ணன்வுத்தரவால் யெதிர்த்தோமிப்போ
அசமாகும்துரியனையும் சிறைவிட்டால்
தொல்லுலகில்பிழைத்தீர் சொன்னேன்கேளீர்

வசனம்.

இந்தப்பிரகாரம் அர்ச்சுனன்சொன்ன நீதிமொழியை வீமசேனன்கேட்டு மெய்தானென்றுசொல்லி தம்பிமாராகிய நகுலசகாதேவரையுங்கூட்டிக்கொண்டு வில்தொடுத்து கந்தருவர்படைகள் முன்னின்று சொல்லுகிறார்கள் கேளுங்கள் கந்தருவர்களே நாங்களோ எங்களண்ணன் தர்மராசன் உத்தரவுபடிக்கு துரியோதனுதியவரை சிறைமீட்டுக்கொடுக்கும்படி வந்தோம் அவர்களைவிட்டால் நீங்களுயிர் தப்புவீர்கள் இல்லாவிட்டால் எமலோகம் சேர்வீரடா கெந்தருவரே.

## கெந்தருவர் விருத்தம்.

இரும்பைக்காய்ச்சித்தோய்த்து தண்ணீர்மீண்டால்
எடுத்தசிறைவிட்டிடுவோ மல்லால்வேறு

இரும்புமென்றறிந்தோப்பேறு எங்கள்ராஜன்
சித்திரசேனனிருக்க நினைத்தீர்காம்
விரும்பியிங்குவராமாட்டார் வந்துவிட்டார்
வெல்லவுமே உங்களாலாகாதிப்போ
கரும்புதன்னைக்கி பிழிவதுபோல்
கசக்கிபுறமிட்டோமப்படி செய்குவோமே.

வசனம்.

கேளுங்கள் வீமார்ச்சுனர்களே இரும்பைக்காய்ச்சி தண்ணீ
ரில்தோய்த்தால் மறுபடியும் அந்த சூடு வந்தாலும் நிறைவிடுவ
தில்லை நீங்களெண்ணிவந்த எண்ணப்படி நடவாது எங்கயெஜமான்
கோபந்தெரியாமல் பேசுகிறீர் இன்னமும் உங்களெண்ணப்படியே
இவ்விடத்திலிருப்பீர்களேயாகில் கரும்பை நசுக்கி பிழிவதுபோல்
உங்களை கசக்கி புறமிட்டோமப்படி செய்வோம் அரசர்களே.



வீமார்ச்சுனன் விருத்தம்.

இசைபாடுங்கந்தருவர் மொழியும்வார்த்தை
யெழிலானவீம னர்ச்சுனர்காதில்
விசையாகநாராசங் காய்ச்சியிட்டதைப்போலும்
படபடவென்றெழும்பிக் கோபம்



அசைவில்லாமுடிபடைத்த அரசர்தன்னை
அருஞ்சிறையிட்டடைத்த கைகாலருப்போமென்ன
விசையாகவில்பாண மெடுத்துக்கொண்டு
எதிர்த்திட்டார் இருவரும்போர்தொடுத்திட்டாரே.

வசனம்.

இந்தப்பிரகாரம் கெந்திருவாள்சொன்ன சொல்லானது வீம
அர்ச்சுனர் காதில் நாராசங்காச்சிவிட்டதுபோல் யெழும்பி கோபம
திகரித்து சொல்லுகிருர்கள் மலைங்காமுடிபடைத்த துரியோத
னமகாராஜனை சிரைபோட்டவனை கைவேறு கால்வேறு சிறம்வே
ருக துண்டிப்போம் பாருங்களடாவென்று வில்தொடுத்து பாணங்
கள் பிரயோகித்து இரண்டு சேனைத்தலைவரும் யெதிர்த்து யுத்தம்
செய்கிறவிதம்.

வீமார்ச்சுனர் தரு.

வில்பாணமெடுத்தாரே வீமார்ச்சுனர்
கல்பாணந் தொடுத்தாரே
நல்லோரென்றஞ்சியே சொல்லாமலுரைத்தோமிந்த
பொல்லாதபாதகரை கொல்லாமல்விடுவதில்லை
புறப்பட்டுவாங்களடா நீங்கள்
தலையருபட்டு போங்களடா
புத்தியில்லா விடையோரே
வெற்றியிங்கே அடைவோரே
கத்திசொல்லி இசைபாடும்
சத்தியில்லா கெந்தர்வரே
கசக்கியிலவம்பஞ் சாக்குவோம்
அடாவுங்களைநசுக்கி அடிபஞ்சாக்குவோம்
கட்டிசிறைபோட்டவரை விட்டுவிடச்சொன்னோமிக
கெர்வமிஞ்சியேவார்த்தை வெருவியிங்குபேசராய்-வில்
நகுலசகாதேவரும் வெகுவிதமாய்பாணங்கள்
நடுநடுக்கும்படி விட்டாரே
கெந்தர்வர்கூட்டம் திடுதிடென ஓடுகிடவே
பின்னிலுமந்த நால்வர்விட்டபாணத்தால்
தாவிதலைதுண்டமாகி நடுவுடலுமுண்டமானர்
கூவிகூவி ஆவிவிட்டுத் துண்டமானர்
அய்யையோவென்று அலைகடல்விழுவாரும்

குலைநடுங்கி அழுவாரும் அர்ச்சுனனை
அதிப்போ மென்றார்
அல்லதவர் மைத்துனனை விதிப்போ மென்றார் - வில்

தப்பியோரிமெவர்களோ குப்பல்குப்பலாய்க்குவித்து
சாக்கூட்டம்போட்டாரே பாண்டவரும்
சிறைகட்ட விட்டாரே
சத்தியமத்தமதரும் வெற்றிமுன் றலைக்தவர்
அரசுசெய்யலாமென்று தர்மபுட்டிமாசு
செயமாகுமென்று இப்படியென்றனி
சய்கையென் அவரைநா மிக்கி நமக்குவோமென்று
சாசமுடன்தேரை விட்டு
பூமியில்குதித்தாசரிட்டம் ஓடிவிட்டான் - வில்

எதிர்கொண்டுவரு மனைமிதில்கண்டு
வருவதையோக்கன் டயர்ந்தாரே
வீமார்ச்சுனர் முகங்கள் சிவந்தாரே
பயர்ந்தயர்ந்தபதைப் புகேளிதரென்று
விரைவுடன் கைதாவி
பரிந்துதழுவினரே நால்வரையும்
மரித்துக்குழவினரே இவ்வகையாய்
புத்திரர்வைத்தை வெற்றியதுவென்று சொல்லி
பாண்டவரு பொருமித்தாரே
வைகயாண்டவில்லை பெருமித்தாரே - வில்

சித்திரசேனன் விருத்தம்.

பாண்டுபுத்திரர்நால்வரையும் சித்திரசேனன்
பண்புடனே தழுவிமுன்பு மேகராகும்
ஆண்டனஞ்நாட்டையும் சூதாடித்தோற்று
அடாதவனமோட்டி விட்ட பாவியரேனோர்
வேண்டுமென்றதிக்கனை வந்திரங்கி
கிரீடைவிசித்திரமுடன் செய்தவரை சிறையிற்போட்டேன்
சாண்டர்தமைக்கிரங்கி வரவோவென்றது
வந்தவிதமென்ன இது புகலுமைன்னவரே.

வசனம்.

இந்தப்பிரகாரம்வீமன் அர்ச்சுனன் நகுலன் சகாதேவனையும் சித்திரசேனன் தழுவிக்கொண்டு அய்யாஎன்னன்புக்குரிய பிரேமிய



ரானவரே நீங்களாண்ட நாடுராச்சியம் அனைத்தையும் சூதாடிகைபரித்து உங்களையும்வனத்துக்கு ஓட்டிவிட்டமகாபாவிகள் நான்தேவிமாருடன் சலக்கிரீடைசெய்யும் தடாகத்திலிரங்கி அடாதகாரியம் செய்தவர்களைப்பிடித்து சிறைபோட்டிருக்கிறேன் அல்லது அவர்கள் மாண்டாரென்று கேழ்விப்பட்டபோதிலும் நீங்களிவ்விடம்வரக்கூடாது அப்படியிருக்க அவர்களைசிறைமீழ்க்க வந்தகாரணம்சொல்லுங்களய்யா அரசர்களே.



வீமனர்ச்சுனர் விருத்தம்.

இந்தப்படிகந்தர்வன்சொல்ல அர்ச்சுனனுங்கேட்டு
கவுரவருமன்ர்களிட தேவிமாரும்
வந்து இந்தவனந்தனிலே வேட்டையாடி
வருமளவில்பிடித்தவரை சிறைபோட்டாரென்ன
யெந்தனுடன்சிலர் சொல்லக்கேட்டு
சும்மாயிருந்திட்டாருலகிலுள்ளோர் என்னசொல்வார்
விந்தையுடனீதடுத்தாச்சொல்லாமல்தான்
விடுவதுவே தர்ம்மமென்றார் வேந்தர் வேந்தன்

வசனம்.

இந்தப்பிரகாரம் கெந்தருவன் சொல்ல அர்ச்சுனன்கேட்டு வாருமையா சித்திரசேனா கவுரவாளும் அவர்கள்தேவிமாரும் இவ்வனத்தில்வேட்டையாடிவரும்போது நீர்அவர்களைப்பிடித்து சிறைபோட்டதாய் இராசாக்கள் எங்களிடத்தில் சொன்னார்கள் இந்தவிசேஷங்கேட்டிருக்க எங்கள்மனம் கல்லா அல்லவென்று இந்த உலகத்தாரென்ன சொல்லுவார்கள் ஆகையால் நீர் தடுத்துச்சொல்லாமல் சிறையைவிடுவது காரியமென்று - ராசராசாக்களுக்கு இராசனான அர்ச்சுனராசன்சொல்ல அதைக்கேட்டு சித்திரசேனன் சொல்லுகின்றான்.

## சித்திரசேனனுக்கும் அர்ச்சுனனுக்கும் தர்க்கம்.

சித்திரசேனன் தரு.

வழக்குரைக்களுக்கிதுவோ குருகுலமேவரும்
நலமேபெரும் சிறையை
நீர்மீட்கவும் வழக்குரைக்குருக்குஇதுவோ
பழக்கமாயுங்களிட பழக்கமதாகாதோ
வழக்கமாய்கைபற்றி நெருக்கவனமோட்டினதும் - வழ

அர்ச்சுனன் தரு.

வனத்திலோட்டினாலும் வரும்தாழ்வும்பெருவாழ்வும்
பொதுதெய்வமரியாதோ வனத்தி
குணத்திலிருந்த அண்ணர்
கினைப்பின்படி முடித்தால்
கனத்தபெருமைபெரும் பனைத்தபயத்தோனே - வன

சித்திரசேனன் தரு.

பெருமையீதாகுமென்நீர் போகப்படும்ஆகட்டும்
அருவையைபங்கம்செய்த பெருமையீதாகுமென்நீர்
விரைவென்னயோசனை அரும்பாவியனைச்சொல்ல
கருமானுலையிலிருந் இரும்பைவாட்டுவதுபோல் - பெ

அர்ச்சுனன் தரு.

கொல்வதுவெற்றியாமோ குறையிட்டோர்சிறைபட்டோர்
அவனையீட்பதுகாரியம் கொல்வது
வெல்வதுயெதிர்த்தோரை சொல்லதுபெரியோர்கள்
கல்லல்லவெநெஞ்சம் நல்லதுல்லகெந்தர்வராசனே - கொல்



சித்திரசேனன் விருத்தம்.

சத்துருவானபேரை சங்கரித்திடுகைமாறு
வெற்றியேபெருகும்வீரா விஜயனேஅவர்களுக்காக
சித்தமும்இரக்கம்வைத்து சிறைமீட்கவேண்டாம்நீர்போம்
பத்தியேகவுரவாளை யென்பாணத்துக்கிரையாக்குவேனே.

வசனம்.

கேளுமையா அர்ச்சுனமகாராசனே பூலோகத்தில் சத்துருக்களையென்று வெற்றிமாலைபூண்ட வில்விஜயனே நீர் அவர்கள் சிறையைமீட்காமல்போம் நானே துரியோதனையும் அவன்தளங்களையும் என் பாணத்துக்கிரையாக்குவேன் என்றுசொல்ல சித்திரசேனனைப்பார்த்து அர்ச்சுனராசன் சொல்லுகிறவிதம்.

அர்ச்சுனன் விருத்தம்.

மறைமுறைதவறினாலும் வாக்கீழ்மேலானாலும்
குருமொழிதவறினாலும் குவலயமழிந்திட்டாலும்
பெருமைசேர்தர்மர்வார்த்தை பிசகினாலடப்பதில்லை
சிறைவிடுவித்து அண்ணாதிருவடிக்கெதிர்நிற்பேனே.

வசனம்.

கேளும் சித்திரசேனா மறையாகிய நாலுவேதம் பிசகினாலும் இந்தஆகாயம்கீழ்மேலானாலும் குருமொழிதவறினபோதிலும் இந்த லோகம் பாழடைந்தபோதிலும் எனது தமையனாராகிய தர்மராஜரின்சொல் தப்பி நடப்பதுண்டோ ஆகையால் அவர் உத்தரவின்படி கவுரவர்களை விடுவித்து என் அண்ணானார்முன்விடுவேன்.

பொது - விருத்தம்.

இந்தப்படிஅர்ச்சுனனும் சொல்லக்கேட்டு
யெழிலிசைக்கும்வல்ல கெந்தர்வராசன்,
சிந்தைமனமொருமித்து தளங்களோடே
செயம்பெருகும்நால்வரையும் கூட்டிக்கொண்டு
பந்தமுடன்வந்திக்கண்டு தர்மர்தானும்
பரிந்தெதிர்போய்தழுவி யாசனமுந்தந்தார்
சித்திரசேனன் தர்மர்சொல்முன்
செப்பினான்கவுரவர்செய் தப்பெல்லாம்செப்பினானே

வசனம்.

இந்தப்பிரகாரம் அர்ச்சுனன்சொல்ல சித்திரசேனனும் இதைக்கேட்டு தன்னுடையதளங்களையும் இன்னம் நால்வகைச்சேனைகளையுங்கூட்டிக்கொண்டு தர்மரிடம்போக அவர்கண்டு எதிர்கொண்டுபோய் மகாசந்தோஷத்துடனே தழுவிசித்திரசேனனுக்கு ஆசனமுங்கொடுத்து உட்காரச்சொன்னார் சித்திரசேனனும் தர்மராசருக்கு கவுரவர்களின் கடத்தையைசொல்கிறவிதம்.

## சித்திரசேனன்சொல் தரு.

சத்தியந்தர்மரே    சதிசெய்சுரர்மேல்
பயமுமேவரவரோ    ஐயனே
சூர்மிகாசுமில்லாத    உத்தமரே உங்களை
குலசெய்ய    வைதிருந்த முனிவோ
அன்னத்தில்சிதைந்தாட்டி    வஞ்சனையும்பார்த்திருந்த
அறும்பாவியர்க்    கிரக்கமேனோ
விட்டுவிடில்கொல்லவென்றவன் தவத்தினை படுத்தினொமென்ற
மிருந்தசந்தோஷமானார்    மெய்யனே
சூதாடிநாட்டைக்    கொண்டு
தாரைகள்முன்னே    திருத்தி
துரோபதையை    தயிலுரித்தாரய்யனே
உங்களைசெய்தகுற்றம்    ஒருக்காலும் அய்யையோ
உத்தமியை    செய்தபங்கம்
பொறுத்து    மறந்தீரோ
நங்கபட்டநாள்    தோறும்
பாவிகளென்னவஞ்    சென்டார்
பரிந்தேன்    தவிக்கலுற்றீரய்யனே
வனத்தில்    ஓட்டம்பாவியை
வதைத்து    மடித்தாலென்ன
மதியேன்பிரம்பு    தய்யோமெய்யனே

### சித்திரசேனன் விருத்தம்.

தர்மபூபதியுன்வார்த்தையை தள்ளவுமாட்டேனய்யா
வர்ப்பமாய்வானுலகம் வச்சிராயணியானோர்
கர்மமாங்கவுரவாளை கட்டியேசிறைபோடென்றார்
தர்மமாம்வார்த்தைதப்பு மதற்குநானஞ்சுவேனே

### வசனம்.

கேளுமையா தர்மராசரே உம்முடைய மதிகின்படி அவர்களை விட்டுவிடுவேன் வானுலகத்தரசனாகிய தேவேந்திரமகாராசன் கவுரவர்கள் எவ்விடத்திலகப்பட்டாலும் பிடித்துச் சிறையிலடைச்சொன்னார் ஆகையால்பிடித்துசிறைபோட்டேன் அவர்களைவிட்டால் தேவேந்திரன்சொல்தப்புமென்று அஞ்சுவேனய்யா மகாராசனே.

### தர்மர் விருத்தம்.

தானவர்க்கரசர்சொல்ல தடுப்பாரோபிரமாலும்
நானவர்வார்த்தைதள்ளி நடக்கவும்வல்லவன்றோ
தீனமாந்துரியனுடைய சிறைமீட்கவிடுத்தம்பி
மானமாமீட்காவிட்டால் அன்னமும்பூசைவேண்டேன்.



### வசனம்.

தேவர்களுக்கரசனாகிய தேவேந்திரனிடவார்த்தையை பிரம்மதேவரும்தள்ளமாட்டார் அப்படியிருக்க அவ்வார்த்தையைதள்ளிப்போடச்சொல்லவல்லவோ ஆகையால்என் தம்பிமாராகியநாம்நுவர் சிறைபட்டு அவர்கள்துயரமடைந்திருக்கிறாரென்று சிலபேர்சொல்லி யான்கேட்டு என்மனந்தாளாமல்சிறைமீட்டுவரச்சொல்லி தம்பிமாராகியவீமன் அர்ச்சுனன் இவர்களை அனுப்பினேன் அவர்கள்சிறையை மீட்காமல்போனால் அனுஷ்டானம்சந்தியானம் சலபானம் முதலாகியதும்செய்யமாட்டேன் இது என்விரதமென்றுசொல்லி பின்னும் சொல்கிறவிதம்

### தர்மர் விருத்தம்.

செய்வதினியொன்றுமில்லை தேவர்கோமான்
சொல்பிசகக்கூடாதென விரதம்தப்பேன்
மெய்யுல்லோர்நல்லோர்கள் நூவல்லோர்கள்
மிகத்தவயோகியர்கள் யாவரெல்லாம்
கைவல்லோர்கவுரவர்க்காய் தர்மர்
விரதங்காத்தாரென்றுசொல்ல களிப்புண்டாகும்
வையிலுறியாருடன் தாந்தவர்கள் செய்குற்றம்
அமைப்பொருதுசிறைவிடுத்தால் வாழ்குவீரே.

### வசனம்.

கேளுமய்யாசித்திரசேனனே தேவேந்திரமகாராசன்சொல்பிசகக்கூடாது இனியென்னசெய்கிறது நல்லோர் பெரியோர் முனீஸ்வரர் ரிஷீஸ்வரர் மற்ற பூலோகத்திலுள்ள யாவரும் கவுரவர்க்காக இந்த தர்மராசன் விரதங்காப்பாற்றினாரென்று சொல்லுவார்கள் அதினாலேமனதுசந்தோஷமாகும் ஆகிலும்நூற்றுவரும் செய்தகுற்றத்தையென்னைப்பற்றிமனதை பொறுத்துசெய்து சிறைவிடுத்தால் இந்தப்பூலோகத்தார்களும் மெச்ச அநேகங்கோடி காலம் கீர்த்தியுடனே வாழ்குவீரய்யா கெந்தருவராசனே.

### சித்திரசேனன் விருத்தம்.

தர்மபூபதிநீயென்றால் தகுமனக்கியர்க்கையாரும்
தர்மமூர்த்தியேமிக்க தளர்ந்துநீதுயரமானாய்
தர்மபூபதியேயுந்தன் தம்பிமார்சிறையைவிட்டு
தர்மபூபதியேயிந்த தரணியுள்ளளவும்வாழி

### வசனம்.

கேளுமையா தர்மபூபதியே தர்மசொரூபியென்றால் உனக்கேதகுமேயல்லாமல் வேறொருவருக்கும் தகாது ஆகிலும் நீர் ரொம்பவும் மனத்துயரங்கொண்டு துன்பப்படுகிறீர் ஆகையால் உம்முடையமனதின்படியே தம்பிமாராகிய நூற்றுவர்களை சிறையைநீரே விடுவித்து

விட்டு இந்த பூலோகமுள்ளளவும் கீர்த்திபெற்று வாழக்கடவது மகாராசனே.

## தர்மர் வாழி விருத்தம்.

வாழிசொல்லிவெகுதருவன் வானவலோகமேவினான்
தாழ்வுமானமுள்ளதர்மர் தம்பிமாரையேவியே
கோதிதேவிநாற்றுவரை சிரைவைமீட்டுவிங்கெனை
சூழியெத்தன்கண்முன்பாக சீக்கிரம்கொண்டுவாரீர்.

வசனம்.

இந்தப்பிரகாரமாக வாழ்த்தி நல்புரிந்து தர்மராஜரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சித்திரசேனனும்தேவலோகம்போனான்பொறுமையாகிய தர்மபுத்திரமகாராஜன் தம்பிமார்நால்வரையும் அழைத்து அவரையும் அவர்கள் தேவிமாரையும் சிரைவிடுவித்து இங்கே யென் கண்முன்பாக அதி சீக்கிரத்தில் கொண்டு வாருங்களென்று சொன்னார்.

விருத்தம்.

தம்பியர்கள்நால்வருமேபோயி சிரைச்சாலை
பூட்டுகளை நான்திறந்து
வெம்பியழும்நாற்றுவரை வாருமென அழைத்து
தர்மரிடத்தில்விட்டார்
அம்புவிழிதுரோபதையும் அரசர்முன்பாக
அழும்கண்ணீரோ
நம்பும்வினையாவரையும் விட்டிடுமோ
வென்றமரர்நாவசத்தார்.

வசனம்.

இந்தப்பிரகாரம் இளையோராகிய நாலுபேரும் சிரைச்சாலை கதவு பூட்டுகளை திறந்து மகா துயரமடைந்திருக்கும் துரியோதனாதியரை அழைத்து வந்து தர்மராஜர் முன்பாக விட்டார்கள் அப்போது அம்பு போல் விழியுடைய துரோபதை யானவள் அந்த ராஜசபையிலே அழுதக்கண்ணீரானது பழுதுபோகாமல் கவுரவர் மனைவியோடுங்கூட அனைவரையும்விடாமல் தொடர்ந்து பற்றிக்கொண்டதென்று அமரராகிய தேவர்கள் சொல்லிக்கொண்டார்கள் அதன்பிறகு நடக்கிற விதங்காண்க.

## போது விருத்தம்,

மரம்போலேகவுரவரும் கிலத்தில் நின்றார்
மனைவியரும்தர்மரைப்பார்த் தழுதுநொந்தார்
அரம்வளர்க்கும்தர்மரவர் கட்டவிழ்த்து
ஆதரணைசெய்தவரை ஆற்றும்போது



குறைவென்னயாவருக்கோ பெண்கள்தாமோ
கூச்சலிதன்றறிவோமென் றெண்ணியெண்ணி
வாமிகுந்தபன்னக சாலையைவிட்டேகி
மாதுதுரோபதையம்மன் வருகின்றாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் கவுரவர் மரம்போல நிலத்தைப்பார்த்துநின்றார்கள் அவர்கள் மனைவியாகிய பெண்கள் தர்மர் முகத்தைப்பார்த்து ஐகோவென்றழுதார்கள் அவர்கள் பின்கட்டுகளை தர்மராஜர் தம்பிமார்களைவிட்டு கட்டவிழ்க்கச்செய்து ஆதரணைசொல்லி ஆற்றும்போது யாருக்கென்ன குறைவோ பெண்கள் அழுகுரல்போலிருக்கிறது இதை அறியவேணுமென்றெண்ணி பன்னகசாலையைவிட்டு துரோபதையம்மன் வருகிறவிதங்காண்க.

துரோபதை விருத்தம்.

பஞ்சபூதத்திலொன்று பாவித்தசத்தியானள்
பஞ்சகன்னியிலொலாகி பாஞ்சாலன்புத்திரியானள்
பஞ்சபாண்டவர்க்குமாலை பண்டிஞ்சூட்டவல்லாள்
பஞ்சவாயுதத்தின்தங்கை பாஞ்சாலிவருகின்றாளே.



## துரோபதைவருகிற தரு.

வன்னியிலுதித்தமாது அன்னம்போல் நடைநடந்து
பன்னகசாலையைவிட்டு பார்ப்பினிவாராள்
மன்னர்பாண்டவர்களிட சொன்னமொழிபிசகாத

உன் ஸ்திரீகளிரீபோலே  [illegible]விளக்கிவாராள்
சோதிரத்தினப்பணிகள்  [illegible]பட்டயினில்தரித்து
ஆதிநாராயணன்தங்கை  அம்மையவாராள்
மானெனும்சாயலுடையாள் பின்னப்பட்டாடையுடுத்தி
கானகமயில்போல்  கர்ப்பிவாராள்
அந்தணர்க்கமைந்த  பாத்திரம்
அன்னதான  தர்மஞ்செய்யும்
ஸ்ரீசிரமதிவதன  துரோபதைவாராள்

துரோபதை விருத்தம்.

என்னடி தங்கைமாரே நீங்களிடம்புலம்பலுற்றீர்
மன்னவர்நால்வரும் [illegible]யென்னகாரணந்தான்
இன்னதென்றறியேனின் இயல்பையெனக்கு
அன்னமேயிச்சொல்லி அறிவிப்பீரறிவிப்பீரே.

வசனம்.

என்னடியம்மா தங்கைமார்களே நீங்களிவ்விடத்தில் புலம்பு கிறகாரணமென்ன நால்வர் இவ்விடம் வராததென்ன இதுசங்கதி களெனக்கு தெரியும்படிசொல்லுங்களம்மா தங்கைமார்களே.

நால்வர்தேவி சொச்சகம்.

அன்னப்பக்ஷிணியே அப்பியெனும்பொப்பியரே
மன்னருடனிவ்வனத்தில் வந்தோர் நாம்வேட்டையதாய்
குன்னமதாய்செத்ருவன் குளக்கரையிலிறங்கினதாய்
சின்னமதாய்சிறைபோட்டான் தேவியெங்கள்வரலாறே.

வசனம்.

கேளும் அம்மா நாங்களோ எங்கெசமானரான நால்வர்க ளுடன் இவ்வனத்தில் வேட்டையாடவந்து ஒரு குளக்கரையிலிறங் கினோம் செத்ருவன் குளக்கரையென்றும் அதில் இறங்கக்கூ டாதென்றும் எல்லோரையும் எங்கள் ராஜாக்களையும்பிடித்து சிறையிட் டானம்மா தாயே.

துரோபதை சொச்சகம்.

சிறையிருந்ததங்கைமாரே தேவியரேநீங்களெல்லாம்
அறையிருந்தாலெயிலேநீங்கள் அல்லல்படுகிறீரோ
குறையிதுவென்றெண்ணுமல்கூட வெந்தன்பன்னசாலையில்
மறையிதுவோ இப்போபாரி மன்னர்முதல்வநான்றுவீரே.

வசனம்.

கேளுங்களம்மா தங்கைமார்களே நீங்கள் அரண்மனையிலிருக் கிறகாலங்களில் எவர்களோயழித்தருளரையோ இப்படிநீங்கள் சிற



பட்டது ஆகையால் என்னுடனேகூட இந்த பன்னகசாலைக்குவந்து இளைப்பாரிபோசனஞ்செய்து வருவீர்கள் வாங்களென்று அழைத் துக்கொண்டுபோய் பன்னகசாலையில் அம்மனைநோக்கி பூசைசெய் கின்றாள்.

துரோபதை தரு.

சங்கராசிவ சந்திரசேகரா  ஓ மகாதேவா
சம்போசங்கரா கிருபையாளுமே
திங்கள்சூடியே தேவதேவனே  ஓ மகாதேவா
செங்கன்மான்மழு வேந்துமீசனே
ஆலமுண்ட நீலகண்டனே  ஓ மகாதேவா
அம்பலந்தனிலாடும் பாதனே
காலகால சூலமேந்தும்  ஓ மகாதேவா
கருணையாளனே கிருபையாருநீ
சுருதிமைப்பொருள் சோதியேசுடரே  ஓ மகாதேவா
சுந்தரிக்கிடம் தந்தநாதனே
பார்க்கடலில் பள்ளிக்கொண்டவர்  ஓ மகாதேவா
பக்ஷமவைத்தென்னை ரக்ஷித்தாளுவாய்
கார்க்கவேறுகெதி யறிகிலேன்  ஓ மகாதேவா
கர்மவினையை நீக்கியாளுவாய்
அட்சயபாத்திரம் சுத்திசெய்கிறேன்  ஓ மகாதேவா
அடியாளுக்கு அன்னம்வேண்டுமே
அய்யனேயிப்போதளிக்க வேணுமே  ஓ மகாதேவா
அளித்தென்னை ரக்ஷித்தாளுவாய்.

துரோபதை தேவாரம்.

காமனையெரித்த கண்ணு காரணாபோற்றி
சோமனைமுடித்தயீசா சுடரொளிவிளக்கேபோற்றி
நீமனமகிழ்ந்துபூசை நிறைவேற்றும்பாதாபோற்றி
எமனையுதைத்தபாதம் மென்றுகண்டேத்துவேனே.

வசனம்.

அரிகரி ஸ்ரீமந்நாராயணா அடியார்கள் கண்ணிமைபோலே கார் க்கப்பட்ட என் அண்ணாவே என் தங்கைமார்களுக்கு அன்னம்வே ண்டுமே இன்று அருள்செய்யவேணுமையா சுவாமி.

இதுவுமது வசனம்.

ஆகோ வாருங்களம்மா தங்கையார்களே இதோ சந்தன தடா கமொன்றிருக்கின்றது யாவரும்போய் ஸ்நானபானஞ்செய்துவிட்டு இதோபன்னகசாலையில் யாவரும் போஜனஞ்செய்யுங்களம்மா தங் கைமார்களே.

## துரோபதைக்கும் நூற்றுவர்தேவிக்கும் சம்வாதம்.

துரோபதை தரு.

என்தங்கைமார்களே — இளைப்பார அன்னமும்
இன்பமுடனுண்ணுங்கடி — என்தங்கைமார்களே

தங்கைமார் தரு.

மன்னரெல்லாம் உபாசம் — இருக்கவும் நாங்களன்னம்
அருந்தவும் — தர்ப்பதாமோ

துரோபதை தரு.

ஏழைப்பிலரேதாகம் — புனலருந்த சம்மதமே
சயனித்துத்தங்கிருந்திவ்விடத்தில் — சாரும்பெண்களா

தங்கைமார் தரு.

தாகமருந்தியென்ன — தலைவிரித்தலங்கோலமாய்
தயங்கிநாம்போகலாமோ — பெண்ணெப்பிலரே

துரோபதை தரு.

சம்பங்கிபெண்ணிவிதை — அட்டசிறுக்கெடுத்து
சடைபின்னிக்கொள்ளுங்கடி — தங்கைமாரே

தங்கைமார் தரு.

சிறைபட்டுசட்டுண்டெங்கள் — தேகமழிந்திட்டாலும்
சேலைக்கிழிந்து — துவேஷமாரேமே

துரோபதை தரு.

துரைராஜர்சபையிலென்னை — துஷ்டன் துயிலுரிந்த
சேலைகளிதையுடுத்தி — சிறப்பாகுவீர்

தங்கைமார் தரு.

அன்னையேயுந்தனாலே — யெல்லாசிறப்பும்பெற்றோம்
அடிதொழுதோம்விடை — தாருமம்மா

### தர்மர் விருத்தம்.

விடைபெற்றுபெருந்திருவாள் தங்கைமாரும்
வெளிவந்துமறைந்திருந்தா ரந்தவேளை
படைமன்னர்துரியனையே தர்மர்பார்த்து
பதைத்துமனந்துயரடைந்தபுத்திகேளும்
குடிகெடுமிவனரிமை நகரில்தானே
கொற்றவனேநீயிருக்க வனமேவந்தோம்
நடைபசிங்களிங்கே வந்ததாலே
ராஜனென்றுயெண்ணாமல் சிறைபோட்டாரே.



வசனம்.

இந்தப்பிரகாரமாக பெருந்திருவாள் முதலாகிய தேவிமார்களும் துரோபதையம்மனிடத்தில் அன்னம்புசித்து இளைப்பாரிசம்பங்கிபெண்ணைநட்டவிசிறுக்கெடுத்து சடைபின்னிக்கொண்டு கிழிந்தசேலைகளைவிட்டு மறுசேலைகள் முதலாகியதுந்தரித்துக்கொண்டு விடைபெற்றுக்கொண்டு பன்னகசாலையைவிட்டு வெளிபுறத்திலவந்து மறைந்து இருந்தவேளையில் தர்மராஜர் முன்பாக இவர்களைப் பார்த்துக் கொண்டு குனிந்திருக்கும் நூற்றுவரையும் தர்மராஜர் பார்த்து மனதுருகித்துடனே சேருமப்பா துரியோதனா நான்சொல்கிறபுத்தியைக்கேளும் நீகம்பீட அஸ்தினாபுரத்திலிருந்து ராஜ்யபாரஞ்செய்திருந்தாயே நாங்கள் விதிப்பயனாலே வனத்துக்கு வந்தோம் நீங்கள் தப்பி வனத்துக்குவந்தபடியினாலே கெந்தருவன்ராஜனென்றெண்ணாமல் சிறைபோட்டானப்பா தம்பியென்று மின்னுஞ் சொல்லுகின்றான்.

### தர்மர்சொல் தரு.

வீஷ்மர்சொல்லும்புத்தியை — விள்ளாமல்கேளும்
கிருபர்வேதமுனை — நாலையும்
விண்டிட — தள்ளாதே
துரோணர் — அஸ்வத்தாமர்
சொல்லுதால் — தள்ளாதே
தகப்பனார்சொல்புத்தியை — சொல்பமாயெண்ணாதே
நல்லோர்பெரியோர்வார்த்தை — தள்ளிவிடாதே
நான்சொன்னேனெடுத்து — ராஜனேயென்தம்பி
புத்தியென்றெண்ணாமல் — பூமியைப்பார்த்திருக்கி
புகலாமலிநின்றான் — துரியராசனுமே

### தர்மர் அறுசீராசிரிய விருத்தம்.

தலைகுனிந்ததுரியோதனன் மனதைதர்மருமேயறிந்து
தம்பிமாரே நீங்கள் அலைபாத வழியிதுவே அஸ்தினாபுரிக்கு
அனைவருமிவ்வழிநோக்கி நடவுமென்றார்
சிலதுதலார்மார்களும் துரியனும்சேர்ந்துவழிநோக்கி
சிலநாட்கள் [illegible] மலைபோலும்வில்புயத்தோன்
காண்டாமன் வந்தார்கள் அவரைப்பார்த்தராசன் சொல்வான்.

வசனம்.

இந்தப்பிரகாரம் துரியோதனன் தலைகுனிந்து வெட்கிநின்றான் அவர்கள்மனதை தர்மராஜர் அறிந்துகொண்டு கேளுந்தம்பிமார்களே அஸ்தினாபுரிக்குப்போக இந்தவழிநேராயிருக்குது ஆகையால் போவீர்களென்று தர்மர்சொல்ல அவர்களும் அவ்வழியே

போகும்போது அவர்கள் ஸ்திரீகளுங்கூடி சிலதூரம் போகுந்தருணத்தில் மலைபோல் புயத்தினையுடைய கர்னராஜன் சகுனிமாமன் இவர்கள்வந்து கூடினார்கள் அவர்களைப்பார்த்து துரியோதனன்சொல்லுகின்றான்.

துரியோதிரன்சொல் விருத்தம்.

என்னநாமெண்ணிவந்தோம் யேதுநாம்பட்டோமிப்போ
இன்னதுசெய்தாலின்று இன்னதுவிளையுமென்று
முன்னமேயிருக்கவேணும் மூடர்தம்புத்திகேட்டோரம்
கர்னனேமலப்புவார்த்தை கூறுமென்னு இனிமேல்தானே.

வசனம்.

கேளும் அண்ணா கர்னராஜனே நாம் என்னநினைந்து என்னஎண்ணங்கொண்டுவந்தோம் அதுகாரியம்முடியாமல் அவமானமாச்சுது இன்னகாரியஞ்செய்தால் இன்னகாரியம் விளையுமென்றுமுன்னமே இருக்கவேணும் யோசிக்காமல் மூடர் புத்தியைக்கேட்டு இப்படிவரலாச்சுது ஆகிலும் நீர் முன்பின் யோசிக்கிறதில்லை கர்னனென்று பேர்பெற்றிருக்கிறீர் இனிமேலாகிலும் இப்பேர்க்கொத்த மலப்புவார்த்தை பேசவேண்டாமண்ணா கர்னராஜனே.

கர்னன்சொல் விருத்தம்.

அன்புதனக்குரியதான அரசேயென்மேல்
ஆயாசப்படவேண்டாம் அதற்கென்செய்வேன்
முன்புகுருசாபம்வந்து நேர்ந்ததிப்போ
முனைமுகத்தில்நின்றயெந்தன் குதிரைதேரும்
வெம்பியுயிர் அழிந்துடைந்து போனபோது
வீரமெங்கேசண்டைசெய்யும் விதமறிந்தேன்
தம்பியெந்தன்நாவறண்டு மதிமயங்கிசமர்மறந்து
புதரிதனில் நுழைந்திட்டேனே.

வசனம்.

கேளும் என் அன்பிற்குரிய அரசனே நீயெனமேலாயாசப்படவேண்டாம் அதற்கென்னசெய்யலாம் எனக்கென் குருவானபரசுராமர் சாபங்கொடுத்திருக்கிறார் அதினாலேயோ [illegible]லேயோ என்று தேர்க்குதிரைசாரதியும் அழிந்துபோனது அதினாலென்று வீரசவுரியபலமும் போச்சுது என்னுடைய நாவறண்டு மதிமயங்கி சமராகிய யுத்தமறந்து ஒருபுதரிலே நுழைந்திருந்து வந்தேனப்பா துரியோதனா ஆகிலும் அதன்பிறகு நடந்தகாரியம்சொல்லவேண்டுமென்று கேட்டார்.



## கர்னனுக்கும் துரியோதிரனுக்கும் தர்க்கம்.

கர்னன்சொல் தரு.

இரத்தினமுடிதரித்த ராஜதுரைசிங்கமே
நானிடைந்தபோதங்கே நடந்தசேதியென்ன

துரியோதிரன்சொல் தரு.

[illegible]ந்தர்வனோடெதிர்த்து கிரீடமும்தேரும்போய்
[illegible]சண்டைசெய்தே னண்ணாவே

கர்னன்சொல் தரு.

தேருங்கிரீடமும்போய் இளைத்துசண்டைசெய்ய
சிவன்செயல்விதிவல்லோ தம்பியரே

துரியோதிரன்சொல் தரு.

ஐயையோபடுபாவி அவனெங்களைபிடித்து
அடிக்காகசிறைபோட்டா னண்ணாவே

கர்னன்சொல் தரு.

நாங்களிருந்துஞ்சிறை நீங்களும்பட்டோமென்றால்
நானிலம்நகையாதோ தம்பியரே

துரியோதிரன்சொல் தரு.

தாயாதிதர்மராம் தம்பிமார்களைவிட்டு
தனித்தனிகட்டவிழ்த்து விட்டாரே

கர்னன்சொல் தரு.

பாண்டவர்கட்டவிழ்க்க பார்மீதனிருந்தென்ன
பதருந்தேதிரேகமல்லா தம்பியரே

துரியோதிரன்சொல் தரு.

என்னசெய்யலாமினி யெங்கெங்கும்வசையாச்சே
ஏதுவாரெவர்களும் பேசுவாரே

கர்னன்சொல் தரு.

கட்டவிழ்த்தயிவரையும் கந்தருவசேனையுடன்
கட்டிசிறைபோட உத்தாரந்தாருந்தம்பி

துரியோதிரன்சொல் தரு.

சவுரியம்பேசுமுந்தன் தாடாண்மையிருக்கட்டும்
சகுனிமாமாகிட்ட வாருமிங்கே

கர்னன்சொல் தரு.

அரசுசெல்வமும்வேண்டேன் அண்ணான்தம்பிவேண்டேன்
அருமைபுதல்வருடன் பெருமைத்தேவியும்வேண்டேன்

சகுனிசொல் தரு.

அறைமிதுவென்ன அபவார்த்தையாகுமே
அடுக்குமோவொருக்காலும் அரசர்களே

துரியோதிரன்சொல் தரு.

அடியிவிருந்தென்ன புகழ்சேர்ந்திடுமோனமின்பு
பொருந்தேதிருந்திடுமோவே அய்யர்களே

சகுனிசொல் தரு.

இதுவென்னபயித்தியம் பேசுச்சக்கேள்வாரா
இவ்வகையென்மென்னி யேருமோ

துரியோதிரன்சொல் தரு.

என்னசீர்சொல்லியும் பென்றுயிர்மாய்ந்தேபெளிப்போ
எருவீர்புலிசோக்கி போகுவீர.

## பெருந்திருவாள் விருத்தம்.

அரியனுபோவுயிர்மாய்க்க பெண்ணிரங்கி
திறைபோடச்சொன்னாலில் தேவிமாரும்
முறையோவென்றலறிடவே கூவிக்கூவி
முகந்தனிலேகையரைந்து புலம்பிவிம்மி
கரையாதோமன்னவரே உன்னெஞ்சந்தான்
கல்நெஞ்சேயுன்னைவிட்டுப் பிரியவென்றன்
குறையோவென்றேசொல்லி பெருந்திருவாள்
கொழுநனைப்பார்த்தழுது கதறுவாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் துரியோதனன் தன்னுயிரைதானே மாய்த்துக்கொள்ளவேண்டுமென்று திரைபோடச் சொன்னான் அப்போது பெருந்திருவாள் முகத்தில் கையையரைந்துகொண்டு இதுவென்னகுறையோவென்று சொல்லி புலம்புகின்றாள்.

## பெருந்திருவாள் புலம்பல் தரு.

மன்னவரேயென்னைவிட்டு சின்னவயதிலென்னையம
மாய்ப்பதுநீதியாமோ மன்னவரே
சின்னஞ்சிறுவயதினில் தேடியென்னை பாலைவிட்டு
இலங்கத்துசெய்திரிப்போ மன்னவரே
அன்றுநான்சொன்னமொழி நன்றயிதென்றெண்ணாமல்
ஆராமுத்தமாடியாகுல் மன்னவரே



ஐயோயின்றுயிரைமகைக்க இசைந்தாதும்வகையாச்சே
இதுவென்னபயித்தியம் மன்னவரே
ஐயோயுகத்துக்கும் பரதநுக்கும்
இழிவாகுமுனையோயேளிந்தயென்னைக்கொண்டவர் மன்னவரே
அகந்தாலமடிந்தாரென்று செகத்துள்ளோரவையவும்
அவமானமாகுமையோ மன்னவரே
உயிரென்னஉடைக்குயிந்த கொடியவார்த்தையை
குலைசெய்யகின்றீர் மன்னவரே
ஐயோ புத்திசொன்ன கர்னன்சகுனி-உன்னை
காப்பாற்றுமென்றார் மன்னவரே

## விருத்தம்.

மன்னவனுமழுமனைவிக் குத்தாரம்சொல்லாமல்
வைராக்கியமாகதிரைக்குள் புகுந்தான்
குன்றுமவர் தம்பியரும் புத்திரர் காணவும்
கோதையரும்தடுக்குமதைக் கேளாமல்
என்னுயிர்விடுக்கமனம் ஒருவாராக
ஏக்கமதாய்நெஞ்சொடுக்கம் மேவிதன்னில்
கண்ணுதலாம்பராசக்தி பூசைசெய்ய
கானகத்தில்வந்தார்கள் ராசஸ்தாரும்

வசனம்.

இந்தப்பிரகாரம்புலம்புகிற பெருந்திருவாளுக்கு பதிலொன்றுஞ்சொல்லாமல் திரைக்குள் புகுந்தபோது தம்பிமார்களும் புத்திராளும் ஸ்திரீகளும் தடுத்து தடைபட்டாமல் மனம் ஒரேஏர்க்கமாய் நெஞ்சை யொடுக்கினான் அந்தருணத்தில் அவ்வனத்துக்கு பராசத்திபூசைசெய்வதற்காக பாதாள ராஜதூதர்கள் வருகிறபடியம்.



## இராக்ஷதர்கள் வருகிற தரு.

பாதாளராக்ஷதரும் வந்தார்
வெகுபராக்கிரமமுள்ள (பாதாள)
பாதாளராக்ஷதர்வந்தார் பராசக்திபூசைசெய்ய
வேதாளபூதமொன்றுமிரண்டும் உருண்டுக்கொண்டு (பாதாள)
வனத்திலிஸ்திரிகள்கண்டு கனத்துதிகைமற
ஆனந்தமாகுமோவென்று அஞ்செயங்கூற (பாதாள)
விரவெண்டயமகாலில் மிருகங்கள்தம்ஜொலிக்க
சூரம்புகத்தி கையில் குத்தும்சில்லாக்கோல்கொண்டு (பாதாள)
பிலத்துவாரவழியாக சலத்தைதவிட்டப்புரம்நோக்கி
குலத்திலராக்ஷதர்நாங்கள் புலத்திலிருந்தோமென்று (பாதாள)

## இராக்ஷதர்கள் விருத்தம்.

ஆர்பிக்கூட்டத்துடன் அடவியில்புலம்பவுந்தீர்
காரின்றும்இரக்காமும் சடலதுவனத்தாப்போலே
பாரினிலின்றென்று பகர்க்கிடீர்நாங்களித்த
நரணர்காணுபாதாள ராக்ஷதாளிந்துமடமே.

வசனம்.

ஆர் இந்தவனத்தில் புலம்புகிறீர் ஸ்திரீகளும் குழந்தைகளும் சமுத்திரம் குழ்ந்தாப்போலிருக்கிறீர்கள் நீங்களார் பின்னுமென்று சொல்லுங்கள் நாங்களோ பரமசிவமானவர் விஸ்வரூபமெடுத்து நின்றபோது மகாவிஷ்ணுவானவர் அவர்பாதத்தைக்காணுத பாதாளத்திலிருக்கும் ராக்ஷதர்கள் நாங்கள் பராசக்தி பூசைசெய்ய இவ்வனத்துக்கு வந்தோம் மாணிடரே.

## இராக்ஷதர்கள் விருத்தம்.

கைலேயங்கிரியில்சென்றோம் காலனையுதைத்தோர்சொல்வார்
தெய்வத்தியமுன்செனமத்தில் தூரியனும்தம்பிமாரும்
நயத்துடன்பின்செனமத்தில் ராக்ஷதராய்பிறந்துபிப்போ
ஜெயத்துடன்கீர்த்திபெற்று சத்துருவைவெல்வாரென்றான்

வசனம்.

கேளுமய்யா ராஜனே நாங்களோ பாதாளத்திலிருந்து போகிலும் கைலாசகிரிக்குப்போரதுண்டு அவ்வனத்துக்கு ஒருநாள்போனோம் பரமசிவமானவர்சொன்னார், முன்செனமத்தில் தூரியோதே



னியர் கர்வண சகுனியும் ராக்ஷதர்களாய் பிறந்தவர்கள் இந்தஜென்மத்தில் ராஜர்களாய்பிறந்திருக்கிறார்கள் அவர்களோ சத்துருவை வென்று ஜெயத்துடன் கீர்த்திபெற்று நீடூழி வாழ்வார்களென்று உங்களைக்கொண்டாடிச் சொன்னார்கள் ஆகையால் நீங்கள் எங்கள் வம்மிஷமாகையால் சத்துராதிகளோடெதிர்த்து யுத்தஞ்செய்கிற காலத்தில் உங்களுக்கு படைத்துணையாகவருகிறோம் ஆகையால் நீர் உயிரை விட்டுப்போகிறீர் வேண்டாம் நீங்களாவரும் இன்னேரமே அஸ்தினாபுரிக்குப்போய்சேருமென்று ராக்ஷதர்சொல்ல துரியோதனன் ப[illegible]கொண்டு சொல்லுகின்றார்.

## துரியோதிரன்சொல் விருத்தம்.

மெய்ஞானராக்ஷதர்களே விமலனார்செய்தகாரியம்
செய்கையப்பயிலையாரும் திசைகதிராம்மாய்ப்பதில்லை
ஐவரைவெற்றிபெற்றோம் அஸ்தினாபுரம்போவோம்
மைவிழிமாதர்மாரும் வசிக்கசெ[illegible]யார்க்கும்.

வசனம்.

ஆதேசவாருங்களப்பா ராக்ஷதர்களே நீங்களோ கைலாசகிரிக்குப்போனவேளை பரமசிவன் யென்னை புனிதனாகபேசினது மெய்தானா ராக்ஷதர்களே.

## ராக்ஷதர்கள் வசனம்.

மெய்தானையா மெய்தானையா மகாராஜனே.

## துரியோதனன் வசனம்.

ஆனால் ஐவரையும் வெற்றிபெறுதற்கு சந்தேகமில்லை இனி நாமெல்லோரும் அஸ்தினாபுரிக்குபோகலாம் நான் உயிர்விடப்போகிறதில்லை இந்தவனத்தில் நடந்த கைபந்துக்களை ஸ்திரீகளாகிலும் புருஷர்களாகிலும் யாதாமொருவருக்கு வாய்க்கப் போகிறீர்கள் ஆனால் பிரயாணப்படுக்கோள் போவோம் அன்பர்களே.

## துரியோதிரன் தரு.

நடப்போம்நடப்போமே
நடப்போம்நகர்நோக்கி தேரேறிபட்டபாடு
தாப்புடன்வனம்நோக்கி
மடக்கொடியுடன்போய் வசைசொல்லமறந்தோமே நடப்
அடிசரக்குமென்பது
ஆனைக்குமொருவேளை வந்துதிப்போ நடப்
கடங்கிறதவதிகள்

11619

காளைகம்சனிக்குருட்டு ... கொள்ளிரோ
கனைத்போகவிப்பக்கோ ... கட்டுக்காரிப்போ கட்டி
சேர்ந்தபின்னில் ... கையைகெசப்பி
ஊர்ந்தவர் ... செய்குவோம் கட்டி

இந்தப்படியெண்ணிசேர்ந்தாரந்து
எழில்குலத்தை நமலர்த்தாள் போற்றிப்போற்றி
பக்குமுள்ளபாட்டு வணங்கி
இம்மடியேயிருந்து சுயோதனனைப்பார்த்து
அந்தகாஞ்செய்யும் கர்ணன்மொழிதன்னைக்கேட்டு
வெருடயனிருவராயில் பெற்றுயிப்போ
சிங்கைசலைப்பவர்வர்க்கு மிகவுங்கேட்டு
சித்தப்பனே ... வனம் சென்றாயின்னாய்.

வசனம்.

இந்தப் பிரகாரம் பெண்ணிக்கொண்டு அஸ்தினாபுரிக்குப் போய் தகப்பனாகிய திருதராட்டிரமகாராஜன் வீஷ்மர் வில்லாசிரியராகிய துரோணாச்சாரியர் கிருபாச்சாரியர் இவர்கள் பாதங்களில் சரணம்செய்து கர்ணன் ஆதிமுதலாக வின்னடிக்கிறதும் சகுனி செய்கிற மோசங்களுக்குயிலாகல் வனத்துக்குபோனதும் பட்டபாடுகளும்சொல்ல அவரவர்மனம்நெந்து மிகவும்வாடிந்து இன்னமும் வெகு விசேஷத்துடனே இராச்சியபாரம் செய்துக்கொண்டிருந்த பின்பு அவ்வனத்திலிருந்த அதிகாரத்திலே அவ்விடத்திலேபட்ட துன்பங்களை ... ஐவரையும் அவர்தேவியையும் பார்த்தகாவலை யில் தனது பெலன்குன்றினதாக் கொண்டபமும். சுபம். சுபம்.

## வாழி விருத்தம்

அருமறையோர்கள் வாழி அரசர்கள் வாசிப்போர் வாழி (வாழி
ஸ்ரீவைகுண்டபதி நாராயணவிலாச அச்சுக்கூடம்வாழி காரணித்தைரைக் ...
சுதர்மனைமுனிவர்வாழிமருவுவாகன்மேகமாருமழைபொழிக்கென்ற ...
செந்தர்வசித்திரசேனன் மறையோர்கள்தானம்வாழி.

# சித்திரசேனன் சண்டை நாடகம்

## ... ம்பூரணம்.

109